E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஜூன் 17 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 142 | Saturday 17, June, 2023 | 10 பக்கங்கள்

## டொலரின் விற்பனை விலையில் அதிகரிப்பு

### விற்பனை விலை ரூ.300 ஐ தாண்டியது



இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 315 ரூபாவாகவும் விற்பனை விலை 300 ரூபாய்க்கு அதிகமாகவும் பதிவாகியது. இதேவேளை, நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில்

06

### சட்டக் கட்டமைப்பை காலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைத்து

# சர்வதேச பாடசாலைகள் மீது கண்காணிப்பு, ஒழுங்குபடுத்தல்

## கல்வி அமைச்சில் விசேட பிரிவை அமைக்க துறைசார் மேற்பார்வை குழுவில் பரிந்துரை



சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக செயற்படுவதற்கும் அவை தொடர்பான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்களுக்கு கல்வி அமைச்சில் விசேட பிரிவொன்றை அமைப்பதற்கு கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் முன்மொழியப்பட்டது.

இது தொடர்பாக தற்பொழுது காணப்படும் சட்டக் கட்டமைப்புகள் காலத்தின் தேவைக்கேற்ற வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டுமெனவும் இதன்போது புலப்பட்டது.

கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (08) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியது.

இதில், இலங்கையில் காணப்படும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பாகவும் அந்தப் பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் அதன் தரம் என்பவற்றை அதிகரிப்பது தொடர்பாகவும்

06

### தனியார் வகுப்பு ஆசிரியர்களுக்கு Teaching License வழங்கவும் முன்மொழிவு



2018-2022 கல்வியாண்டு தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். தேசிய பாடசாலைகளுக்கு 1,729 நியமனங்களும் மேல் மாகாணத்துக்கு 626 நியமனங்களும் வழங்கப்பட்டன. ஏனைய 08 மாகாணங்களிலும் 7,342 நியமனங்கள் அந்தந்த மாகாண ஆளுநர்களால் நேற்று வழங்கப்பட்டன.




### அநுராதபுரம்-ஓமந்தை வரையான ரயில் சேவை அடுத்த மாதம் முதல்!

ரயில்வே திணைக்களம் தெரிவிப்பு

03

### எரிபொருளுக்கு ஒரே நாளில் 80 மில். டொ. செலவு

# வாகன இறக்குமதிக்கு இடமளிக்க போவதில்லை

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



வாகனங்கள் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப் போவதில்லையென்ற தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதையடுத்தே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"ஒரு நாளில் 75 அல்லது 80 மில்லியன் டொலர்கள்

06

# குருந்தூர் விகாரைக்கு சொந்தமான காணி வேறு எவருக்கும் இல்லை

### வழங்கவும் தீர்மானிக்கவில்லை – சமன் ஏக்கநாயக்க



குருந்தூர்மலை விகாரையின் காணிகளை ஏனையவர்களுக்கு வழங்குவதற்கான தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லையென்று தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி வண. எல்லாவல மேதானந்த தேரருக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க விளக்கமளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில், குருந்தூர்மலை விகாரைக்கு சொந்தமான அரச காணிகள் தொடர்பாக ஜனாதிபதி

06

# இன நல்லிணக்கம் ஏற்பட நாட்டு மக்களது சிந்தனை மாற வேண்டும்

### அந்த மாற்றத்தை ஏற்படுத்த முன்வருமாறு நீதியமைச்சர் அழைப்பு



நாட்டிலுள்ள அனைவரும் எமது சகோதரர்களென்ற சிந்தனை ரீதியான மாற்றம் ஏற்படும்வரை நாட்டில் அபிவிருத்தி மற்றும் மனித வாழ்க்கைக்கான பாதுகாப்புத் தன்மையை எதிர்பார்க்க முடியாது. அதனால், இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப நாட்டு மக்களின் சிந்தனை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலாசார நல்லிணக்கத்தை மக்கள் மயமாக்கும் உலகத் தரம் வாய்ந்த திரைப்படம் திரையிடுதல் மற்றும் அது தொடர்பான கலந்துரையாடலின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக் கேட்போர்

06

### காங்கேசன்துறையில் புதிய பயணிகள் முனையம் திறப்பு

# 600 சுற்றுலாப் பயணிகளுடன் அதிசொகுசுக் கப்பல் வந்தது

### அமைச்சர்களான நிமால், டக்ளஸ் வரவேற்பு



இலங்கை துறைமுக அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட காங்கேசன்துறை நவீன புதிய பயணிகள் முனையம் நேற்று (16) துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

06



# இரண்டு பஸ்கள் நேருக்கு நேராக மோதி விபத்து

### ஆறு பேர் காயமுற்று ஆஸ்பத்திரியில்



தியத்தலாவையில் இரண்டு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில், பாடசாலை மாணவர்கள் ஐவர் உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுக் (16) காலை தியத்தலாவை, காஹகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

06

### நிரந்தர சமாதானம், தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு;

# நாட்டில் புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்வது குறித்து பேச்சு

### அலி சப்ரி, சாகலவுடன் கனடா ரோய் கலந்துரையாடல்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவையும் கனேடிய அரசியல், சமூகச் செயற்பாட்டாளரான ரோய் சமாதானம் நேற்று முன்தினம் (15) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பாக தெரிவித்த சமூகச் செயற்பாட்டாளரான ரோய் சமாதானம்,

06


### கிழக்கு ஆளுநரின் பொதுமக்கள் குறை தீர்க்கும் பிரிவு




கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு வழங்கும் நோக்குடன் 'ஆளுநரின் பொதுமக்கள் குறை தீர்க்கும் பிரிவு' உத்தியோகபூர்வமாக அம்மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருகோணமலையிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று (16) திறந்து வைக்கப்பட்ட போது...

# இலங்கையில் இனவழிப்பு இடம்பெற்றதாக கூறவில்லை

### கனடா வெளிவிவகார அமைச்சு அறிக்கை கூறுகிறது



இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றதாக கண்டறியப்படவில்லையென, இலங்கை அரசாங்கத்திடம் கனடா தெரிவித்துள்ளது.

எனினும், கனேடிய வெளிவிவகார அமைச்சின் நிலைப்பாட்டுக்கும் அந்நாட்டு பிரதமர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் நிலைப்பாட்டுக்குமிடையில் முரண்பாட்டு நிலைமை காணப்படுகிறது.

கனடாவின் பிரம்டன் நகர பேரவையால் கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி இன அழிப்பு தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

மாநகரசபைகள், மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து சுயாதீனமானவையெனவும் இலங்கை இனவழிப்பு குறித்த

06

# சிரேஷ்ட தொழிற்சங்கவாதி அஷ்ரப் அஸீஸ் காலமானார்

### நேற்று குப்பியாவத்தையில் நல்லடக்கம்



மலையக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த சிரேஷ்ட அரசியல், தொழிற்சங்கவாதியான 'மனிதருள் மாணிக்கம்' என போற்றப்படும் அமரர் அப்துல் அஸீஸின் புதல்வர் அஷ்ரப் அஸீஸ் நேற்று (16) அதிகாலை காலமானார்.

அஷ்ரப் அஸீஸும், மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக தொடர்ச்சியாக குரல் எழுப்பி வந்தவர். இவர் அஸீஸ் காங்கிரஸ் எனும் தொழிற்சங்கத்தை நிறுவி, அதனூடாக அரசியல், தொழிற்சங்க பணிகளை முன்னெடுத்தவராவர்.

06

### கட்டுப்பாட்டை இழந்த கன்டர் வாகனம்;

# வவுனியாவில் கோர விபத்தில் தாயும் மகளும் ஸ்தலத்தில் பலி


### பாடசாலை செல்ல காத்திருந்த வேளை அனர்த்தம்

ஓமந்தை விசேட நிருபர்



வவுனியா, கன்னாட்டி பிரதேசத்தில் பாடசாலைக்கு மகளை அனுப்புவதற்காக

06



### 60 வகையான மருந்துகளின் விலைகள் 26 முதல் குறைப்பு

சில்லறை விலைகளை நிர்ணயித்து வர்த்தமானி

03




### சிறந்த பல்கலைக்கழகமாக பேராதனை பல்கலை தெரிவு

இலங்கையில் மீண்டும் முதலாவது இடம்

03

# மாறுபட்ட நிலைப்பாட்டாளர்கள் துரோகிகள் என சித்தரிப்பு

### தமிழ் அரசியல்வாதிகள் சிலரின் பண்பு மாறிவிட்டது –CV



தம்மிலிருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களை துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவர்களாகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதோவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டதாக, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களை துரோகிகளாக சித்தரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றதென்றும், அவர் தெரிவித்தார். தமிழ் அரசியல் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட

06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைன், ரஷ்யாவுக்கு ஆபிரிக்க தலைவர்கள் அமைதிப் பயணம்



உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக ஏழு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அந்த இரு நாடுகளுக்கும் அமைதிப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

தென்னாபிரிக்கா, எகிப்து, செனகல், கொங்கோ–பிராசவில்லே, சாம்பியா மற்றும் உகண்டா நாடுகளின் தூதுக்குழுவினர் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கியை நேற்று (16) சந்தித்ததோடு தொடர்ந்து இன்று (17) ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்திக்கவுள்ளனர்.

எனினும் ரஷ்ய படையெடுப்புக்கு எதிரான உக்ரைன் பதில் தாக்குதல்களை ஆரம்பித்திருக்கும் நிலையிலேயே இந்த தலைவர்களின் விஜயம் இடம்பெற்றுள்ளது.

ஆபிரிக்க தலைவர்கள் நேற்று உக்ரைன் தலைநகரை அடைந்தபோதும் அந்த நகர் மற்றும் பிராந்தியத்தில் வான் தாக்குதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கறுங்கடலில் இருந்து உக்ரைன் வீசிய கலிப்ர் ஏவுகணைகள் கீவ் நகரை நோக்கி வந்ததை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ரஷ்யா இந்த வாரத்தில் கீவ், ஒடிசே மற்றும் உக்ரைன் ஜனாதிபதியின் சொந்த ஊரான கிரிவி ரி மீது சரமாரி தாக்குதல்களை நடத்தியது. மறுபுறம் ரஷ்ய படைகள் மீது உக்ரைன் நடத்தும் பதில் தாக்குதல்கள் மாறுபட்ட முடிவுகளை வெளியிப்படுத்தி வருகின்றன.

ரஷ்ய படையிடம் இருந்து பல கிராமங்களை மீட்டதாக உக்ரைன் இராணுவம் கடந்த திங்கட்கிழமை அறிவித்தது.

எனினும் இந்த மோதல் தீவிரம் கண்டிருப்பதோடு ரஷ்ய படையுடன் தமது துருப்புகள் கடும் சண்டையை எதிர்கொண்டிருப்பதாக உக்ரைன் பிரதி அமைச்சர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்ய போரில் பொரும்பாலான ஆபிரிக்க நாடுகள் நடுநிலை வகிப்பதோடு, ஆபிரிக்கப் பிராந்தியத்துடன் ரஷ்யா நல்லுறவை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிரேக்க படகு விபத்து: உயிரிழப்பு பல நூறாக அதிகரிக்கும் அச்சம்

### படகில் 100 சிறுவர்கள் வரை இருந்துள்ளனர்

ஐரோப்பாவை அடையும் முயற்சியில் குடியேறிகள் மற்றும் அகதிகளை ஏற்றிய மீன்பிடி படகு மூழ்கிய சம்பவத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தென்மேற்கு கிரேக்கத்திற்கு அப்பால் கடந்த புதனன்று மூழ்கிய இந்தப் படகில் இருந்த குறைந்தது 79 பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மிட்புக் கப்பல்கள் சம்பவ இடத்தில் தொடர்ந்து தேடுதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

லிபியாவில் இருந்து இத்தாலியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது ஆழ் கடலில் மூழ்கிய இந்த ஈ.ஆர்.டி. இற்கு தெரிவித்துள்ளார்.

உயிர் தப்பியவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு படகில் குறைந்தது 40 சிறுவர்கள் உட்பட 700 தொடக்கம் 750 பேர் இருந்ததாக குடியேற்றத்திற்காக சர்வதேச அமைப்பு கணித்துள்ளது. எனினும் படகில் சுமார் 100 சிறுவர்கள் இருந்ததாக சிறுவர்களை பாதுகாப்போம் அமைப்பு கணக்கிட்டுள்ளது.

கிரேக்கத்தின் தெற்கு துறைமுக நகரான பீலொஸில் இருந்து சுமார் 80 கிலோமீற்றர் தொலைவிலேயே இந்தப் படகு மூழ்கி இருப்பதாக கருதப்படுகிறது.

அகதிகள் செயற்பாட்டாளர்கள்,





கப்பலில் இருந்து 104 பேர் காப்பாற்றப்பட்டனர்.

இந்நிலையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் படகில் கீழ் பகுதியில் சிக்கி இருக்கலாம் என்று அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது உறுதி செய்யப்படும் பட்சத்தில், மத்திய தரைக்கடலில் இடம்பெற்ற மிக மோசமான விபத்துகளில் ஒன்றாக இது பதிவாக வாய்ப்பு உள்ளது.

“இன்னும் உயிருடன் இருப்பவர்களை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது” என்று ஒய்வுபெற்ற கிரேக்க கடலோரக் காவல்படையின் அட்மிரல் நிகோஸ் ஸ்பானோஸ் அந்நாட்டு அரச தொலைக்காட்சியான தன்னார்வ தொண்டு அமைப்புகள், ஐரோப்பிய அரசியல்வாதிகள் சிலர் மற்றும் பாப்பரசர் பிரான்ஸில் என பல தரப்பினரும் இந்த அனர்த்தம் தொடர்பில் கவலை மற்றும் கோபத்தை வெளியிட்டுள்ளனர்.

பாப்பரசர் “ஆழ்ந்த கவலை” மற்றும் “உயிரிழந்த பல குடியேறிகள்', அவர்களின் அன்புக்குரியவர்கள் மற்றும் இந்த சோகத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இதயபூர்வமான பிரார்த்தனைகளை” வழங்கினார் என்று வத்திக்கான் கூறியது.

இந்த படகு மூழ்குவதற்கு முன் அதனை வானில் இருந்து எடுத்த படங்களை கிரேக்க கரையோர காவல் படையினர் வெளியிட்டுள்ளனர். அதில் படகின் மேல் மற்றும் கீழ் பாகங்களில் அளவுக்கு அதிகமானவர்கள் நிரம்பி இருப்பது தெரிகிறது.

கிரேக்க கடற்கரைக்கு அப்பால் இருந்து படகில் இருந்தவர்களிடம் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை உதவிக்கான அழைப்பு விடுக்கப்பட்டதாக ஐரோப்பிய மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவும் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ந்து இது பற்றி கிரேக்க நிர்வாகத்தை அறிவுறுத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்தது. இதன்போது அந்த படகில் இருந்து தலைமை மாலுமி சிறு படகு ஒன்றில் தப்பிச் சென்றுவிட்டதாக உதவி கோரியவர்கள் தெரிவித்துள்ளனர்.

படகின் எஞ்சின் நின்று இரு பக்கமாக அசைய ஆரம்பித்த நிலையில் புதன்கிழமை அதிகாலை 2 மணி அளவில் மூழ்கி இருப்பதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் உயிர் தப்பியவர்கள் துறைமுக நகரான கலமடாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பதோடு அவர்களில் பொருபாலானவர்கள் ஆண்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூழ்கும் நிலையில் இருந்து காப்பற்றப்பட்ட பலருக்கும் மருத்துவர்கள் சிகிச்சை அளித்துள்ளனர்.

இந்த குடியேறிகள் படகில் இருந்து உயிர் தப்பிய ஒன்பது பேர் ஆட்கடத்தல் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதாக கிரேக்க கரையோர காவல் படை தெரிவித்தது.

இந்த சந்தேக நபர்கள் அனைவரும் எகிப்து நாட்டவர்கள் என்று கிரேக்க அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

கிரேக்கத்தில் மூன்று நாள் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுவதோடு உயிரிழந்தவர்களின் உடல்கள் மரபணு சோதனைக்காக ஏதன்ஸ் நகருக்கு அருகில் உள்ள கல்லறை ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தேவையான காலம் வரை மீட்பு பணிகள் முன்னெடுக்கப்படும் என்று கடலோரக் காவல் படையினர் தெரிவித்துள்ளனர்.

மத்தியதரை கடலை கடக்கும் முயற்சியில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். கடந்த பெப்ரவரியில் தெற்கு இத்தாலியின் கலப்ரியா பிராந்தியத்தில் கட்ரோ நகருக்கு அருகில் குடியேறிகள் படகு ஒன்று மூழ்கியதில் குறைந்தது 94 பேர் உயிரிழந்தனர்.

மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் இருந்து வரும் அகதிகள் மற்றும் குடியேறிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழைய கிரேக்கம் பிரதான பாதை ஒன்றாக உள்ளது.

இந்த ஆண்டில் 70,000க்கும் அதிகமான அகதிகள் மற்றும் குடியேறிகள் ஐரோப்பாவை அடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இத்தாலியில் கரையொதுங்கி இருப்பதாக ஐ.நா தரவுகள் குறிப்பிடுகின்றன.

## பெரு நாட்டு குப்பை கிடங்கில் 3000 ஆண்டு மம்மி கண்டுபிடிப்பு



பெரு தலைநகர் லிமாவில் உள்ள குப்பை கொட்டும் தளம் ஒன்றில் தொல்பொருள் ஆய்வாளர்கள் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியில் சுமார் 3000 ஆண்டுகள் பழைமையாக மம்மி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழ்வாராய்ச்சிக்கு உதவி புரிந்த மர்கோஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆரம்பத்தில் அந்த மம்மியின் தலைமுடி மற்றும் மண்டையோட்டை கண்டுள்ளனர்.

அந்தத் தளத்தில் இருந்து சுமார் எட்டு தொன் குப்பைகளை அகற்றி வரலாற்று எச்சங்களை தேடும் ஆராய்ச்சியை கவனமாக ஆரம்பித்ததாக தொல்பொருள் ஆய்வாளரான மிகுவேல் அகுய்லர் தெரிவித்தார்.

இந்த மம்மி மஞ்சாய் பண்பாட்டுக் காலத்தைச் சேர்ந்தது என்று நம்பப்படுகிறது. மஞ்சாய்கள் தற்கால லிமா நகரைச் சூழ கி.மு. 1500 தொடக்கம் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்களாவர்.

அவர்கள் சூரியோதயத்தை நோக்கிய ஆங்கில எழுத்தான யூ வடிவ கோவில்களை கட்டியதில் பிரபலமானவர்களாவர்.

அவ்வாறான யூ வடிவக் கோவில் ஒன்றின் மையப் பகுதியிலேயே இந்த மம்மி வைக்கப்பட்டிருப்பதாக அகுய்லர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உடல் பருத்தி மற்றும் காய்கறி நார்களால் செய்யப்பட்ட துணியால் சுற்றப்பட்டிருந்தது. இந்த நபர் கோவிலின் நிர்மாணப் பணியின் கடைசி கட்டத்தில் பலியிடப்பட்டிருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்த உடலுடன் சோளம், கொக்கோ இலைகள் மற்றும் விதைகள் போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பலியிடுவதற்காக வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் வருவதற்கு முன்னர் தற்போதைய பெருவில் இருந்த பல்வேறு பண்பாடுகளிலும் உடலைப் பதப்படுத்தும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

## சீனாவில் வைப்புகளுக்கு வட்டி விகிதம் குறைப்பு




சீனாவின் அரச வங்கிகள் வைப்புகளுக்கான வட்டி விகிதத்தை இவ்வாரம் முதல் குறைத்துள்ளன. கொவிட்–19 பெருந்தொற்று பரவுவதை கட்டுப்படுத்தும் கொள்கை கடந்தாண்டு நீக்கப்பட்ட பின்னர் இரண்டாவது தடவையாக இக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வங்கிகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஆறு வர்த்தக வங்கிகள் வைப்புகளுக்கான கேள்வியை 0.25 வீதத்தில் 0.2 வீதத்திற்கு குறைப்பதாக அறிவித்துள்ளன.

சீனாவில் 2023 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 5 சதவீதம் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் 4.5 வீத பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என சீன பொருளாதார நிபுணர் லேரி ஹு சுட்டிக்காட்டியுள்ளார்.

## கனடாவில் பஸ்-ட்ரக் மோதி 15 பேர் பலி



கனடாவின் மொனிடோபா மாகாணத்தில் பெரும்பாலும் வயதானவர்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி ஒன்று ட்ரக் வண்டியில் மோதிய பயங்கர விபத்தில் 15 பேர் பலியாகியுள்ளனர்.

கார்பரியில் உள்ள ட்ரான்ஸ் கனடா அதிவேகப் பாதையில் கடந்த வியாழக்கிழமை (15) இந்த விபத்து நேர்ந்துள்ளது. சம்பவ இடத்திற்கு அவசரப் பிரிவினர் மற்றும் விமான அம்புலன்ஸ்கள் விரைந்தன.

இரு பிரதான பாதைகள் சந்திக்கும் இடத்திலேயே விபத்து நேர்ந்துள்ளது. பஸ்ஸில் இருந்த பயணிகள் கர்பர்ரியில் உள்ள கசினோ ஒன்றுக்கு பயணித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இரு வண்டிகளினதும் ஓட்டுநர்கள் உட்பட குறைந்தது 10 பேர் மோசமான காயங்களுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நண்பகலில் பள்ளத்தில் வாகனம் ஒன்று எரிவதைக் கண்டாதாக சம்பவத்தை பார்த்த ஒருவர் சி.பி.சி செய்திக்கு தெரிவித்துள்ளார்.

விபத்து குறித்து தகவலறிந்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, விபத்தில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்தார். மொனிடோபாவில் இருந்து வரும் செய்தி நம்பமுடியாத துயரமானது என ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

அண்டை மாகாணமான சஸ்கட்ச்வானில் கடந்த 2018 ஏப்ரலில் கிராமப்புற வீதி ஒன்றில் கனிஷ்ட ஹொக்கி அணி பயணித்த பஸ் மீது ட்ரக் வண்டி மோதிய விபத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர். 2019இல் ட்ரக் வண்டி ஓட்டுநருக்கு எட்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கனடாவின் மிக மோசமான வீதி விபத்து 1997 ஆம் ஆண்டு இடம்பெற்றது. அப்போது கியுபக் மாகாணத்தில் பஸ் வண்டி ஒன்று பள்ளத்தில் விழுந்ததில் 44 பேர் கொல்லப்பட்டனர்.

## வட கொரிய ரொக்கெட் பாகத்தை மீட்டது தெற்கு



வட கொரியாவின் தோல்வி அடைந்த விண்வெளி ரொக்கெட்டின் மிகப் பெரிய பாகம் ஒன்றை கடலில் இருந்து வெற்றிகரமாக மீட்டதாக தென் கொரியா குறிப்பிட்டுள்ளது.

கடந்த மே 31 ஆம் திகதி இராணுவ உளவு செய்மதி ஒன்றை விண்ணில் நிறுவுவதற்காக வட கொரியா அனுப்பிய ரொக்கெட் வெடித்து கடலில் விழுந்தது. அந்த முயற்சி தோல்வி அடைந்ததாக வட கொரியா அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து அந்த ரொக்கெட் பாகங்களை தேடும் முயற்சியில் தென் கொரியா தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை (15) பின்னேரம் மஞ்சள் கடலில் இருந்து ரொக்கெட்டின் பிரதான உடல் பாகத்தை கண்டுபிடிக்க முடிந்ததாக தென் கொரியா கூறியது.

“மீட்கப்பட்ட பொருள் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனம் போன்ற சிறப்பு நிறுவனங்களால் விரிவாக பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது” என்று கூட்டுப் பணியாளர்களின் தலைவர் விடுத்த அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

இயோசியோன் தீவின் தென் மேற்காக சுமார் 200 கிலோமீற்றருக்கு அப்பால் சுமார் 75 மீற்றர் (250 அடி) ஆழத்தில் கடல் படுகையில் இருந்து இந்த பாகம் எடுக்கப்பட்டது என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

“சொன்மா” என்ற பெயர் எழுதப்பட்ட வெள்ளை நிற பீப்பாய் போன்ற நீண்ட உலோகப் பொருள் ஒன்றை காட்டும் படங்களை தென் கொரிய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

வட கொரியாவின் இந்த ரொக்கெட் வீச்சுக்கு அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் கண்டனம் வெளியிட்டிருந்தன. வட கொரியா பலிஸ்டிக் ஏவுகணை தொழில்நுட்பத்தை சோதிப்பது ஐ.நா தீர்மானத்தை மீறுவதாக உள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2023 ஜுன் 17 சனிக்கிழமை

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.32 |
| லுஹர் | 12.12 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.27 |
| இஷா | 07.44 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் ஆனி 03

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்


திதி: சஷ்டி



குற்றவியல் அவதூறு சட்டத்தை நீக்கிய நான்

## ஒருபோதும் கருத்துரிமையை பறிக்கும் வகையில் செயற்படப் போவதில்லை

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



வலயத்தின் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறாதவாறு குற்றவியல் அவதூறு சட்டத்தை நீக்கிய தான், ஒருபோதும் கருத்துரிமையை பறிக்கும் வகையில் செயற்படப் போவதில்லையென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம், இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக எவருக்கேனும் நெருக்கடிகள் ஏற்படும் பட்சத்தில், அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க வழி ஏற்படுத்துமெனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகின் அனைத்து நாடுகளும் இலத்திரனியல் ஊடகப் பாவனையின் போது இவ்வாறான செயன்முறைகளை பின்பற்றுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கையில் அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது ஐக்கிய இராச்சியத்திலுள்ள முறைமையை முழுமையாக பின்பற்றுமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேச செயலக அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் (15) இணைய முறைமை ஊடாக கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றிய போது,

இந்த செயற்பாடு ஹோமாகம பிரதேச செயலகத்தில் நடைபெற்றதால்,

06

## முதலீடுகள் தொடர்பான சிக்கலான சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டம்

வருட இறுதிக்குள் கொண்டுவர தீர்மானம் - இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



நாட்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பாக புதிய சட்டமூலமொன்றை இவ்வருட இறுதிக்குள் நிறைவேற்ற அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக, முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும், அடுத்த வருடத்திலிருந்து இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்வதில் காணப்படும் சிக்கலான நிலைமைகள் நீங்குமென்றும், அவர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற முதலீட்டு மேம்பாடு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது, அனுமதியைப் பெறுவது போன்ற பல்வேறு விடயங்களில் சிக்கலான நிலைமைகள் காணப்படுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் இராஜாங்க அமைச்சர் உத்தேச முதலீட்டுச் சட்டம் தொடர்பாக தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பது உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக உலக வர்த்தக மையத்தின் 27ஆவது தளத்தில் முதலீட்டாளர் வசதி மையத்தை (Investor Facilitation Center) தொடங்கியுள்ளதாகவும் இது அனைத்து அரசாங்க நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்புடன் இணைந்து செயற்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதில் முதலீட்டாளர்கள் தமக்கு காணப்படும் பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து தீர்த்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. புதிய சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்படும்வரை தற்காலிக ஏற்பாடாக இது இருக்குமென்றும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைக்கு முதலீடுகளை கொண்டுவரக்கூடிய புதிய சுற்றுலா வலயங்களை அடையாளம் கண்டிருப்பதாகவும் அவற்றை ஊக்குவித்து புதிய முதலீட்டாளர்களை கொண்டுவருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அங்கீகரிக்கப்படாதவற்றை பாவிக்க வேண்டாம்

## அழகுசாதன பொருட்களால் தோல் நோய் வியாதிகள்

சுகாதாரப் பிரிவினர் கடும் எச்சரிக்கை



அங்கீகரிக்கப்படாத அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்துவதால், நாட்டில் தோல் நோய்கள் பதிவாகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக, சுகாதாரத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மைக்காலங்களில் தோல்

06

## வலி. வடக்கில் காணி அளவீடுகள்; மக்கள் அச்சமடைய தேவையில்லை

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



யாழ். வலிகாமம் வடக்கிலுள்ள தனியார் காணிகளை சட்ட ரீதியாக மக்களிடம் கையளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள காணி அளவீடுகள் தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லையென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழாவில் பிரதம விருந்தினராக நேற்று (16) கலந்துகொண்டு, நூற்றாண்டுச் சின்னத்தை திறந்துவைத்து உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், "2013ஆம் ஆண்டு இராணுவத்தினரின் பயன்பாட்டுக்கு அரசுடமையாக்கும் நோக்கில் வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6,300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு, காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், இக்காணிகள் சட்ட ரீதியாக அரச காணிகளாகவே இப்போதும் காணப்படுகின்றமையால், 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில், புதிய வர்த்தமானி வெளியிட வேண்டியிருக்கின்றது.

இது தொடர்பாக, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாக கலந்துரையாடி, 2013 வர்த்தமானியை மீளப்பெறுவதற்கும் தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே, காணி அளவீடுகள் மேற்கொள்ளப்படும் போது, மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

அதேபோன்று, போதைப்பொருள் பாவனை மற்றும் சமூக சீர்கேடுகள் எங்களுடைய சமூகத்தில் அச்சுறுத்தும் விவகாரமாக மாறியிருக்கின்றன. இதிலிருந்து எமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பாரிய சமூகக் கடமை எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

இது தொடர்பான விசேட

06

## அரசின் செலவினங்கள் குறைப்பு கொள்கை இரண்டு அரச திணைக்களங்களுக்கு பூட்டு

### செஹான் சேமசிங்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்கத்தின் செலவினங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் ஓரம்சமாக தொலைத்தொடர்பு திணைக்களம் மற்றும் உள்ளக வர்த்தக திணைக்களம் ஆகியவற்றை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நிதி, பொருளாதார மேம்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மூலம் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.


அரசாங்கத்தின் செலவினங்களை குறைக்கும் அரசின் கொள்கையின் கீழ் அரச நிறுவனங்கள் மூலம் எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் நடைபெறாத நிலையில், அவற்றை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அதன் கீழ் ஒரு நடவடிக்கையாகவே மேற்படி இரண்டு திணைக்களங்களும் மூடப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

மேற்படி இரண்டு நிறுவனங்கள் மூலமும் மேற்கொள்ளப்படும் சேவைகள், வேறு அரச நிறுவனங்கள் மூலம் இடம்பெற்று வருவதாகவும் அந்த விடயத்தை கவனத்திற்கொண்டே இந்த இரண்டு நிறுவனங்களையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அநுராதபுரம் – ஓமந்தைவரையான ரயில் சேவை அடுத்த மாதம் முதல்!

### ரயில்வே திணைக்களம் தெரிவிப்பு




அநுராதபுரத்துக்கும் ஓமந்தைக்குமிடையிலான ரயில் போக்குவரத்து அடுத்த மாதம் மீள ஆரம்பிக்கப்படுமென, ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.


கொழும்பு, கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான ரயில் சேவைகள் வழமையான நேர அட்டவணையின் படி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. அநுராதபுரத்துக்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் பாதையின் திருத்தப் பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் ரயில் பாதை மூடப்பட்டது.

62 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த ரயில் பாதை, இந்திய கடன் உதவியின் கீழ் 33 பில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்டுள்ள ரயில் பாதையில் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்க முடியுமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

## 60 வகையான மருந்துகளின் விலைகள் 26 முதல் குறைப்பு

சில்லறை விலைகளை நிர்ணயித்து வர்த்தமானி



அறுபது வகையான மருந்துகளின் விலைகள் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, 60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, அம்மருந்து வகைகளின் அதிகபட்ச சில்லறை விலை 16 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளதாக, அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த பல்கலைக்கழகமாக பேராதனை பல்கலை தெரிவு

### இலங்கையில் மீண்டும் முதலாவது இடம்




2023ஆம் ஆண்டின் சிறந்த பல்கலைக்கழகமாக பேராதனை பல்கலைக்கழகம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாகவும் பேராதனை பல்கலைக்கழகம் முதலிடத்தில் உள்ளமை சிறப்பம்சமாகும்.

2023 Times Higher Education இதழில் வெளியான தரவரிசை அறிக்கையின்படி மீண்டும் பேராதனை பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளது.

இந்தத் தரவரிசை, நிலைத்தன்மை மேம்பாட்டு இலக்குகள் உள்ளிட்ட 13 செயல்திறன் குறிகாட்டிகளை பயன்படுத்தி வகைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை பல்கலையில்

## வடபகுதி மாணவர் இருவரின் சடலங்கள் நேற்று மீட்பு

### தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாக தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களின் சடலங்கள் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அப்பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் வழங்கிய தகவல்களுக்கமைய, இரண்டு மாணவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இருவரதும் மரணங்களுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென்றும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரிவித்த பொலிஸார்,

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் யாழ்ப்பாணம், நாரந்தனை வடக்கைச் சேர்ந்த விக்னேஸ்வரன் அபினேஷன் (வயது 23) எனும் மாணவனின் சடலம் அந்த மாணவர் தங்கியிருந்த விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டதாக, மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் பொரலஸ்கமுவ, கட்டுவாவல பிரதேசத்தில் வாடகைக்கு பெறப்பட்டிருந்த மாணவர்களுக்கான விடுதியின் கீழ் மாடியில் அந்த மாணவனின் சடலம் இவ்வாறு மீட்கப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பல்கலைக்கழகத்தின் மேல் மாடியில் தங்கியிருந்த மாணவர் ஒருவர் நேற்று அதிகாலை 4:30 மணியளவில் அங்கிருந்து கீழ் மாடி நோக்கி வந்த போது, மேற்படி மாணவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும் அந்த மாணவன்

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின்போது

## கடமைகளை செய்ய தவறிய பொலிஸ் சார்ஜன்ட் பதவி நீக்கம்

### 12 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தீர்மானம்



2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற போது, கட்டான பொலிஸ் நிலையத்தில் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை சேவையிலிருந்து நீக்குவதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்தது.

இதன்படி, கடந்த 14ஆம் திகதி முதல் அமுலாக்கு வரும் வகையில் அவரை சேவையிலிருந்து இடைநீக்கம் செய்து, பொலிஸ் தலைமையகம் உத்தரவு பிறப்பித்தது.

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய நடவடிக்கை எடுக்க தவறியமைக்காகவே மேற்படி பொலிஸ் சார்ஜன்ட் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பொலிஸ் சார்ஜன்டுக்கு எதிராக ஒழுக்காற்று உள்ளிட்ட 12 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பொலிஸ் சார்ஜன்ட் முதல் சந்தர்ப்பத்தில் அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஒப்புக்கொண்டதாகவும் இதனால், பொலிஸ் மா அதிபர் அவரது சேவையை நிறுத்த தீர்மானித்ததாகவும், பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## கல்கிஸ்ஸையில் விடுதி சுற்றிவளைத்து சோதனை

### ஏழு பெண்கள் உட்பட எண்மர் கைது

கல்கிஸ்ஸையில், காலி வீதியில் மஸாஜ் நிலையமென்ற போர்வையில் விபசார விடுதியொன்றை நடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் ஏழு பெண்கள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின்படி இந்த சுற்றிவளைப்பை நேற்று முன்தினம் மேற்கொண்டதாக கல்கிஸ்ஸை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

களுத்துறை, இதல்கஸ்இன்ன, பன்னிப்பிட்டிய, வாத்துவ, வத்தளை மற்றும் ஹல்மில்லாவ ஆகிய இடங்களில் இவர்கள் வசிப்பவர்களென்பதுடன், 19 மற்றும் 29 வயதுடைய பெண்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை நேற்று கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 187.20 | 198.68 |
| கனடியன் டொலர் | 210.97 | 223.72 |
| யூரோ | 304.19 | 321.09 |
| ஜப்பான் யென் | 2.0304 | 2.1406 |
| சிங்கப்பூர் டொலர் | 210.03 | 222.35 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 353.88 | 372.53 |
| சுவிஸ் பிராங்க் | 311.71 | 330.77 |
| அமெரிக்க டொலர் | 285.61 | 298.85 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 775.31 | கட்டார் ரியால் | 80.18 |
| குவைத் டினார் | 950.18 | சவூதி ரியால் | 77.93 |
| ஓமான் ரியால் | 759.21 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 79.58 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 03ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 27

## குறள் தரும் சிந்தனை

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்

மது அருந்துவதே இல்லை என்று ஒருவன் பொய் சொல்ல முடியாது; காரணம், அவன் மது மயக்கத்தில் இருக்கும்போது அந்த உண்மையைச் சொல்லி விடுவான்.

# நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மீட்டெடுக்க வேண்டியது அவசியம்!

நீண்ட காலமாக நஷ்டத்தில் இயங்கி வருகின்ற அரசாங்க நிறுவனங்கள் சிலவற்றை தனியார்மயப்படுத்தும் எண்ணத்தை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. இத்திட்டம் இன்று நேற்று தோன்றியதல்ல. கடந்தகாலத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களும் இத்திட்டத்தைக் கொண்டிருந்தன. ஆனாலும் அத்திட்டத்தை ஆட்சியிலிருந்த அரசாங்கங்களால் நிறைவேற்ற முடியவில்லை. எதிரணிகளின் எதிர்ப்புகளே இதற்குக் காரணமாக அமைந்திருந்தன.

சில அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துவது சாதகமானதா இன்றேல் பாதகமானதா என்றெல்லாம் எதிரணிகள் சீர்தூக்கிப் பார்த்து ஒருபோதும் ஆராய்ந்ததில்லை. அரசின் நடவடிக்கைகளை எதிர்ப்பது மாத்திரமே எதிரணிகளின் கொள்கையாக இருந்தது. ஆகவே நஷ்டத்தில் இயங்குகின்ற அரச நிறுவனங்கள் சிலவற்றைத் தனியார்மயப்படுத்துவதென்பது முழுமையாக நிறைவேறவில்லையென்றே தெரிகின்றது.

தற்போதும் டெலிகொம் உட்பட நஷ்டத்தில் இயங்குகின்ற அரசநிறுவனங்கள் சிலவற்றை தனியார்மயப்படுத்த வேண்டுமென்ற கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் மறுபுறத்தில் அது தொடர்பாக எதிரணியினர் எதிர்ப்புப் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதைக் காண முடிகின்றது. டெலிகொம் போன்ற அரசநிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தோன்றுமென்று எதிரணியினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அரசநிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துவதால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வாறு அச்சுறுத்தல் ஏற்படுமென்பதற்கான விளக்கங்களை எதிரணியினர் முன்வைக்கவில்லை. அதற்கான விளக்கத்தை அவர்களால் வழங்கவும் முடியாது. ஏனென்றால் அரசநிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதற்கும், தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதே உண்மையாகும். அதாவது முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சுப் போடுவதைப் போன்றதே எதிரணியினரின் பிரசாரமாகும்.

அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள சில நிறுவனங்கள் உண்மையிலேயே நீண்ட காலமாக நஷ்டத்திலேயே இயங்கி வருகின்றன என்பது வெளிப்படையான உண்மை ஆகும். டெலிகொம் மாத்திரமன்றி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்ற ஏனைய சில நிறுவனங்களும் நீண்ட காலமாக நஷ்டத்திலேயே இயங்கி வருகின்றன. இதற்கான காரணம் கடந்த கால ஆட்சியின் போது அந்நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வீணான தலையீடு ஆகும்.

சீராக இயங்கிய அரசநிறுவனங்களின் நிர்வாகத்தில் தலையீடு செய்தது மாத்திரமன்றி, அந்நிறுவனங்களில் ஆளணிக்கு மேலதிகமான நியமனங்களை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும். தேவைக்கு மேலதிகமாக ஊழியர்களை நியமித்ததன் காரணமாக பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஒரு உதாரணமாக இலங்கைப் போக்குவரத்து சபையைக் குறிப்பிட முடியும்.

இலங்கைப் போக்குவரத்து சபையானது முன்னொரு காலத்தில் அதிக இலாபத்திலேயே இயங்கி வந்தது. ஆனால் அந்நிலைமை தொடர்வதற்கு கடந்தகால அரசாங்கங்கள் இடமளிக்கவில்லை. அரசியல் செல்வாக்கும் பலமும் கொண்ட பலர் தங்களது சுயதேவைக்காக அரச நிறுவனங்கள் சிலவற்றை தவறாகப் பயன்படுத்திக் கொண்டனர். தமது ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்பதற்காக அரசாங்க நிறுவனங்களையே பயன்படுத்திக் கொண்டனர்.

அரச நிறுவனமொன்று இலாபத்தில் இயங்குகின்றதா அல்லது நஷ்டத்தில் இயங்குகின்றதா என்பது குறித்தெல்லாம் அன்றைய அரசியல்வாதிகள் பலர் எண்ணிப் பார்த்ததில்லை. தங்களது ஆதரவாளர்களை மகிழ்விக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு அரசநிறுவனங்கள் பலவற்றில் வேலைவாய்ப்புகளை அள்ளி வழங்கினர். இதன் விளைவானது காலப்போக்கில் மிகவும் பாரதூரமானதாகவே அமைந்தது.

தேவைக்கு மீறிய ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குவதற்கு அந்நிறுவனங்களிடம் நிதிக்கையிருப்பு இருக்கவில்லை. அரசாங்க திறைசேரியிடம் பணம் பெற்றே ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்க வேண்டிய நிலைமைக்கு அந்நிறுவனங்கள் தள்ளப்பட்டன. காலப்போக்கில் அந்நிறுவனங்கள் அமிழ்ந்தே போய் விட்டன. நிறுவனமொன்று வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதென்பது இலகுவான காரியமல்ல. மீண்டெழ முடியாமல் அதலபாதாளத்தில் இன்னுமே வீழ்ந்து கிடக்கின்ற அரசகட்டுப்பாட்டு நிறுவனங்கள் இலங்கையில் பல உள்ளன.

ஆனால் குறிப்பிட்டுக் கூறக் கூடியவாறு இலங்கைப் போக்குவரத்து சபை மாத்திரம் மீண்டெழுந்து வந்துள்ளது. ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவி வகித்த காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபையை மீட்டெடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டதன் பயனாக இ.போ.சவினால் மீண்டெழ முடிந்தது. தற்போது இலங்கைப் போக்குவரத்து சபையானது பயணிகளுக்கு தரமான சேவையை வழங்கியவாறு இலாபமீட்டிக் கொண்டிருக்கின்றது.

நஷ்டத்தில் இயங்குகின்ற அரசநிறுவனங்களை ஒருபோதும் கைவிட்டுவிட முடியாது. அந்நிறுவனங்களை எவ்வாறாவது மீட்டெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். உலக நாடுகள் பலவற்றில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பல நிறுவனங்கள் தனியார்துறையினரால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் அந்நிறுவனங்கள் அரசின் முழுமையான கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அந்நிறுவனங்களை அரசாங்கம் முழுமையாகவே தனியாரிடம் ஒப்படைத்து விட்டதாக அர்த்தம் கொள்ளுதல் தவறாகும்.

இலங்கையிலும் இன்று நஷ்டத்தில் இயங்குகின்ற அரசநிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் யோசனைக்கு எதிராக அர்த்தமற்ற பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விடயத்தில் மக்களுக்கு உண்மை நிலைமையை தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு நாட்டுநலனில் அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# கல்முனை மாநகர சபையின் வரலாற்றில் முதன்முறையாக விமரிசையான விருதுவிழா

கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான விருது விழா கடந்த புதன்கிழமை (14) மாலை, கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இதன்போது மாநகர சபையின் 14 துறைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிசிறந்த ஊழியர்கள் 14 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ மேற்பார்வையாளரான எம்.எம். றிஸ்வான், கல்முனை மாநகர சபையின் கடந்த ஆண்டுக்கான அதிசிறந்த ஊழியராக தெரிவு செய்யப்பட்டு, விஷேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையில் நிர்வாக உத்தியோகத்தர்களாக கடமையாற்றி, ஓய்வு பெற்றுள்ள எம்.ஏ.ரஹீம், ஆனந்தகௌரி கந்தசாமி உள்ளிட்ட 06 உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 08 உத்தியோகத்தர்களினதும் சேவைகளைப் பாராட்டி, நினைவுச் சின்னம் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், மாநகர சபையின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற திண்மக்கழிவகற்றல் சேவையில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்ற 05 மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட 98 ஊழியர்கள் இதன்போது பரிசுப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை மாநகர சபையை பொறுபேற்று குறுகிய காலத்தினுள் நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொண்டு, மாநகர சபையை வினைத்திறன் மிக்க நிறுவனமாக மாற்றியமைத்தமைக்காக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, 'ஆளுமைக்கான அடையாளம்' என்று மகுடம் சூட்டப்பட்டு, ஊழியர் சமூகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.







இவ்விழாவில் மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களினால் அரங்கேற்றப்பட்ட பாடல்கள், நடனங்கள், கவிதைகள் உள்ளிட்ட கலை, கலாசார நிகழ்ச்சிகள் விழாவை களைகட்டச் செய்திருந்தன. தேசிய கீதத்துடன் ஆரம்பமான இவ்விருது விழாவில் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் வரவேற்புரையையும் பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டப்பொல ஆகியோர் வாழ்த்துரைகளையும் விழாக்குழுச் செயலாளரான வருமான பரிசோதார் சமீம் அப்துல் ஜப்பார் நன்றியுரையையும் நிகழ்த்தினர். விழா நிகழ்வுகளை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ஜாபிர் தொகுத்து வழங்கினார். இவ்விழாவில் மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், ஆயுர்வேத வைத்திய அதிகாரி நந்தினி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிதி உதவியாளர் சசிகலா, உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌசாட் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வருமான பரிசோதகர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அனைத்துப் பிரிவுகளினதும் ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இராப்போசனத்துடன் கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான இவ்விருது விழா நிறைவு பெற்றது. கல்முனை மாநகர சபையின் வரலாற்றில் இதுவே பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் முதன்முறையாக இடம் பெற்ற விருதுவிழா என்பது குறிப்பிடத்தக்கது.

**ஏ.எம்.அஸ்லம்...**

# தமிழ்மொழியை அழியாமல் பாதுகாத்து உலகத் தமிழர்களை ஒன்றிணைப்போம்!

## நியூஸிலாந்து வரவேற்பு நிகழ்வுகளில் மாத்தளை சோமு

புலம்பெயர்ந்த மூத்த தமிழர்கள் தமிழும் ஆங்கிலமும் கற்று பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாக இருக்கிறார்கள். தமிழ் பேசத் தெரிந்தவர்கள் எந்த மொழியும் பேசுவார்கள். தமிழின் லகர, ளகர, ழகர உச்சரிப்பு எம்மொழியை கற்றாலும் பேசவைக்கும். தமிழ் அறிவியல் கொண்ட மொழி. மண்ணியல், வானவியல், உழவியல், மருந்தியல், கல்வியல், கலையியல், சிற்பவியல், கடலியல் என பலவற்றில் ஆழமான கருத்தியல் கொண்டது. இவ்வாறு நியூசிலாந்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் உரையாற்றிய எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்தார்.

நியூசிலாந்தின் ஒக்லாந்து மற்றும் வெலிங்டன் ஆகிய நகரங்களில் நடந்த வரவேற்பு நிகழ்வுகளில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழர்கள் புலம்பெயர்ந்திருக்கிறார்கள். அவர்களின் அடுத்த தலைமுறையினரிடம் தமிழ் இல்லையென்றால் அவர்களைப் பார்க்க தமிழ் உறவு இருக்காது. தமிழ்தான் தமிழரின் அடையாளம். அது பண்பாட்டை, மரபை உள்ளடக்கியது. அதுவே புலம்பெயர் தமிழர்களை இணைக்கும் மொழி. ஆகவே தமிழை அடுத்த தலைமுறையினருக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்ற பாரதிக்கு தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, பிரெஞ்ச், ஆங்கிலம் ஆகிய மொழிகள் நன்கு தெரியும். தமிழைக் கற்பதால் பிற மொழி பேசமுடியாது என்பது தவறானது.




இந்திய அறிவியலின் தந்தையாகப் போற்றப்படும் அப்துல் கலாம், மின்னஞ்சலைக் கண்டுபிடித்த சிவா அண்ணாதுரை ஆகியோர் தமிழ்க்கல்வி கற்ற தமிழர்களாவர். தமிழ் அவர்களை உயர்த்தியிருக்கிறது. அவ்வாறான தமிழைக்கற்று, தமிழோடு உலகத்தை ஒட்டி உறவாடி, அதுவே நமது அடையாளமென உணர்ந்து தலைநிமிருவோம்" என்றும் மாத்தளை சோமு தனதுரையில் தெரிவித்தார்.

"ஒரு மொழி தெரிந்தால் மற்றைய மொழியைக் கடன் வாங்க வேண்டும். அதனால் கடனாளியாகிறான். இரு மொழி தெரிந்தால் பலசாலியாகிறான். பலமொழி தெரிந்தால் அறிவாளியாகிறான். தாய்மொழி தெரியாவிட்டால் நோயாளியாகிறான். எனவே அடுத்த தமிழ் தலைமுறையை தமிழ் தெரிந்தவர்களாக ஆக்குவதற்கு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்யவேண்டும்'' என்றும் மாத்தளை சோமு மேலும் தெரிவித்தார். வெலிங்டனில் பார்வையாளர்களின் பல கேள்விகளுக்கு எழுத்தாளர் மாத்தளைசோமு பதிலோடு கூடிய விளக்கம் அளித்தார். இவ்விழாவில் நியூசிலாந்து தமிழ்ச் சங்கத் தலைவர் சுந்தரராஜன், திருமுருகன் ஆலய செயலாளர் கணேஷ், மேர்வின் கன்ஸன்டைன், ஜோர்ஜ் அருளானந்தம்,இளம்பிறை பாலச்சந்திரன், முனைவர் இலக்குவனார் சொக்கலிங்கம், சண்முகம் வேலுப்பிள்ளை, பிரதீபன் பூபாலசிங்கம், வெலிங்டன் தமிழ்ச்சங்கத் தலைவர் பிரபாகரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள்.

ஒக்லாந்து நிகழ்வுகளை சங்கநாதம் தமிழ் வானொலி ஒருங்கிணைப்பாளர் அற்புதசிங்கமும் சிங்கவரோதயமும் ஏற்பாடு செய்திருந்தார்கள் . வெலிங்டன் நிகழ்வை வெலிங்டன் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

# பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற இலக்கிய கர்த்தா மாக்சிம் கார்க்கி




பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற இலக்கியப் படைப்பாளி மாக்சிம் கார்க்கி உயிர்நீத்த நாள் ஜூன் 18 ஆகும். உழைக்கும் மக்களுக்காக எழுச்சி விதைகளை விதைத்து புதியதோர் உலகம் படைத்தவர் கார்க்கி. முற்போக்கு இலக்கியத்தில் கூடிய எவு வாசிக்கப்பட்ட முதன்மையான நூல் மாக்சிம் கார்க்கியின் 'தாய்' என்றே கூறலாம். உலகம் வியந்த 'தாய்' நாவலை படைத்த 'மாக்சிம் கார்க்கி' உலகப் புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளர்கள் வரிசையில் முன்னிற்பவர்.

'தாய்' எனும் நாவல் எல்லா யுகங்களிலும் படிக்கப்படும் நாவல் ஆகும். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற இலக்கியப் படைப்பாளியின் நினைவுநாள் சர்வதேச இலக்கிய பரப்பில் அனுஷ்டிக்கப்படுகிறது.

## 'தாய்' என்ற உலகம் போற்றும் உன்னத நாவலை படைத்த இலக்கிய மேதையின் நினைவுதினம் நாளை


மேற்கத்திய தொழிற்புரட்சிக்குப் பின்னர் புதிய இலக்கிய வகைகளும் உத்திகளும் தோன்றின. தொழிற்சாலை முறை தோற்றுவித்த அவலங்கள் சுரண்டல், வறுமை, பிணி, ஏற்றத்தாழ்வுகள், சமூகக் கொடுமைகள் பற்றிப் பாடல்களும், சிறுகதைகளும் புதினங்களும் வெளிவந்தன.

மத்திய காலத்தில் இத்தாலியில் லியனார்டோ டா வின்சி கண்ட மறுமலர்ச்சி இயக்கம் பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பரவிச் செல்வாக்குப் பெற்று ரஷ்ய நாட்டையும் பாதித்தது.

1648 இல் இங்கிலாந்திலும் 1789 இல் பிரான்ஸிலும் நடந்த புரட்சிகள் மிக முக்கியமானவை. அவை சமுதாயத்தில் பழைய அரசியல் அமைப்புமுறை மாறிப் புதிய அமைப்பு முறை ஏற்பட வழிகோலின.

உலக மக்கள் முழுமைக்குமான உரிமைகளையும் கடமைகளையும் தேவைகளையும் வகுத்து வரையறை செய்ததோடு, மக்களது நாட்டம் அவற்றை அடைவதை நோக்கியே இருக்க வேண்டும் என்னும் நிலைமையை உருவாக்கின. இந்த நிலைமையே புதிய இலக்கியம் தோன்றுவதற்கு உந்து சக்தியாக வளர்ந்தது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட சமுதாய மாற்றங்களைப் பிரதிபலிக்க ஐரோப்பிய நாடுகளில் எல்லா மொழிகளிலும் இலக்கியங்கள் தோன்றின. இவை மக்களுடைய வாழ்நிலைகளை உள்ளது உள்ளவாறே எடுத்துக்காட்டின.



இப்புதிய சிந்தனை ஐரோப்பாக் கண்டம் முழுவதும் காட்டுத் தீ போல உழைப்பாளரிடையே பரவிற்று. முதலாளித்துவம் சோஷலிசம் என்னும் வாதங்களும் பிறந்தன. மார்க்சியம் உழைக்கும் வர்க்கத்தையும் சிந்தனையாளர்களையும் இலக்கிய படைப்பாளிகளையும் ஈர்த்தது. மக்சீம் கார்க்கி இவர்களில் ஒருவர்.

மக்சீம் கார்க்கி 1868 மார்ச் 28ஆம் நாள் ரஷ்யாவில் நிஜினி நோவோகார்டு என்னும் இடத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் அலக்ஸி என்பதாகும். இவருடைய தந்தையார் ஒரு தச்சர். சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். தாயும் மறுமணம் செய்துகொண்டார். எனவே அலக்ஸி தம் தாய்ப்பாட்டியால் வளர்க்கப்பட்டார். இதனால் வாழ்நாள் முழுதும் பாட்டியிடம் பாசமும், பரிவும், நன்றியும் காட்டி வந்தார். இவரை வளர்த்து ஆளாக்கிய பெருமை பாட்டிக்கு உரியது.

1879 இல் அவருடைய தாய் இறந்தார். சிறுவனாக இருந்தபோதே பல பணிகளைச் செய்ய வேண்டியவரானார். முதலில் காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தார். ஓர் ஆண்டுக்குப் பிறகு கட்டட ஒப்பந்தகாரரிடம் வேலை செய்தார். வேலை கடினமாக இருந்ததால் தப்பி ஓடி டோப்ரி என்னும் பயணக்கப்பலில் வேலைக்குச் சேர்ந்தார். கப்பலில் சமையல்காரராக இருந்த மிகைல் அகிமோவிச் என்பவர் அவருக்குப் புத்தகங்கள் படிப்பதற்கு ஆர்வம் ஊட்டினார். கோகோல், ஹேன்றி பீல்டிங் முதலான நாவல் ஆசிரியர்கள் அறிமுகமானார்கள்.

சோஷலிச கம்யூனிச கருத்துகள் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பரவி உறக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பின. ரஷ்யாவை ஆண்ட ஜோர்ஜ் மன்னன் மக்களுக்குக் கொடுமை இழைப்பதை ஒரு பெருமையாகவே கருதினான். எதேச்சதிகாரமும் கொடுங்கோன்மையும் அடக்குமுறையும் அவனுக்கு கைவந்த கலை.

இலக்கிய வாசிப்பு படிப்பு பயிற்சி அவருடைய அறிவைக் கூராக்கியது. சிந்தனையை விரிவாக்கியது. அவரும் எழுதத் தொடங்கினார். இதற்கு முன் தன் வாழ்க்கையில் நேரிட்ட துன்பதுயரங்களையும் இழிவுகளையும் நினைத்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். உடலில் குண்டு பாய்ந்தும் பிழைத்துக்கொண்டார்.

1896ஆம் ஆண்டு அச்சுப்பிழை திருத்துவதில் துணைவராக இருந்த ஏகடரினா பவ்லோவ்னா வால்ழினா என்னும் பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாகத் தேர்ந்தெடுத்தார். 1898 இல் 'படங்களும் கதைகளும்' தொகுதிகள் வெளிவந்தன. அவர் டிப்லிஸ் நகரில் இருந்தபோது சமூக ஜனநாயக அமைப்புடன் தொடர்புகொண்டு இருந்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். புகழ்பெற்ற வரலாற்றாளர் கிப்பன்ஸ் (Gibbons) என்பவருடைய ரோமானியப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்னும் நூலைப் படித்தார். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் தொடர்ந்து காவல்துறையின் கண்காணிப்பில் இருந்தார்.

1899ல் அவருடைய 'பாமா கோர்தயேவ்' என்னும் நாவல் வெளிவந்தது. 1990 இல் லியோடால்டாயைச் சந்தித்துக் கருத்து பரிமாறிக்கொண்டார். 1901ஆம் ஆண்டு புரட்சி இயக்கத்தில் மிக தீவிரமாகப் பங்குபெற்றார். அறிவியல் கழகம் அவரை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டது 'பெட்டிபூர்ஷ்வா' என்னும் நாவல் 1902இல் வெளிவந்தது.

தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக அரசு அவரை அர்சமஸ் நகருக்கு கடத்திற்று. தொழிலாளர்கள் கிளர்ச்சியில் பங்கு பெற்றார். நிஜினி நோவோகார்டில் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் தீவிரமாக நடைபெற்றது. அதே ஆண்டு மொஸ்கோ கலையரங்கில் அவருடைய 'அடிஆழம்', 'கோடை மக்கள்' என்ற நாவல்கள் நாடகமாக அரங்கேற்றப்பட்டன. 1903 இல் தீவிர பொல்ஷிக் அனுதாபி ஆனார்.

1907இல் போல்ஷிவிக் கட்சியில் ஐந்தாவது காங்கிரஸில் பங்கு பெற்றார். 'தாய்' முழுவதும் வெளிவந்தது. 1908 முதல் கார்க்கி லெனின் தொடர்பு வலுவடைந்தது. 1909இல் கார்க்கியின் படைப்புகள் ரஷ்யமக்கள் உழைக்கும் வர்க்கங்கள் எழுச்சிக்குப் பெரும் துணை செய்து வருகின்றன என்று லெனின் கார்க்கியை மனமாரப் பாராட்டிக் கடிதம் வரைந்தார்.

1935 ஆம் ஆண்டு ரோமெய்ன் ரோலண்டும் அவர் மனைவி மரியா பாவ்லோவ்னாவும் சோவியத் நாடு வந்து, சிலகாலம் கார்க்கியுடன் தங்கினார்கள். கார்க்கியின் படைப்புகள் மீண்டும் மீண்டும் அச்சாயின. 1936இல் கார்க்கி நோய் வாய்ப்பட்டார். குடும்பத்தினர் கட்சியினர் முழு அக்கறைகாட்டியும் ஜூன் 18 அன்று காலை 11 மணிக்கு உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற இலக்கியப் படைப்பாளி உயிர் நீத்தார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# மணிப்பூரில் ஒருமாதகாலத்துக்கு மேலாக ஓயாத வன்முறைகள்!



## ஏராளமானோர் மரணம்!

இந்தியாவின் மணிப்பூரில் வன்முறை உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. மத்திய அமைச்சர் ரஞ்சன் சிங் வீடு வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மணிப்பூரில் 40 நாட்களாக நிகழ்த்தப்பட்ட வன்முறையில் பலர் உயிரிழந்துள்ளனர்.

மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி குக்கி இனக்குழுவினரிடையேயான மோதல் ஒரு மாத காலத்துக்கும் மேலாக தொடருகிறது. வடகிழக்கு மாநிலத்தில் பட்டியல் பழங்குடியினர் (எஸ்.டி) பிரிவில் சேர்க்கக் கோரி இரு பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் மணிப்பூர் மாநிலத்துக்கு நேரில் சென்று முகாமிட்டு அமைதி முயற்சிகளை முன்னெடுத்தார். ஆனாலும் மணிப்பூரில் வன்முறை ஓயவில்லை.

இம்மாநிலத்தில் 10,000 க்கும் அதிகமான அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையினர், 500க்கும் அதிகமான பி.எஸ்.எப்.வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பாதுகாப்புப் படையினரிடம் இருந்து ஆயுதங்களை கொள்ளையடித்து வன்முறைகளில் ஈடுபடுவதால் நிலைமை மிக மோசமடைந்துள்ளது. மைத்தேயி, குக்கி ஆகிய இரு இனக்குழுக்களும் ஆயுதங்கள் ஏந்தி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மோதலில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த வாரம் மணிப்பூர் பெண் அமைச்சர் ஒருவரது வீடும் வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மைத்தேயி இனக்குழுவினரே இந்த வன்முறையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. மேலும் குக்கி இனக் குழுவினரது வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தலைநகர் இம்பாலில் மத்திய அமைச்சர் ஆர்.கே ரஞ்சன் சிங் வீடும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த போது மத்திய அமைச்சர் ஆர்.கே.ரஞ்சன் சிங் வீட்டில் இல்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உலகில் உயரிய பௌத்த மதத்தை இலங்கைக்கு வழங்கிய பாரததேசம்



புத்தர்பிரான் அவதரித்ததும், அவர் ஞானம் பெற்றதும், பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசிமாத (போயா) பௌர்ணமி தினத்திலாகும். இவ்வாறான சிறப்பு மிக்க வைகாசிமாத பூரணை தினத்தையே பௌத்த மக்கள் வெசாக் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர்.

அதேபோன்று பௌத்த தர்மம் இலங்கைக்கு முதன் முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டதும் ஒரு பூரணை தினத்திலேயாகும். இந்நிகழ்வானது ஆனி மாத பூரணை தினத்திலேயே நிகழ்ந்துள்ளது. இப்பூரணை தினத்தையே பொசன் பௌர்ணமி (போயா) தினமாக பௌத்த மக்கள் அனுஷ்டிக்கின்றனர். பூரணை தினத்தை புனித நாளாக இந்து சமயம் போற்றுவதுபோல் பௌத்த சமயமும் போற்றுகின்றது.

கி.மு. 328 ஆவது ஆண்டில் ஒரு பொசன் போயா தினத்தன்று இந்திய சாம்ராச்சியத்தின் அசோகச் சக்கரவர்த்தியின் மகளான துறவறம் பூண்ட இளவரசி சங்கமித்தை தேரர் தனது சகோதரனான இளவரசர் அரஹட் மஹிந்த தேரருடன் இலங்கைக்கு வந்து மிஹிந்தலை மலையுச்சியில் இலங்கையில் அரசாட்சி புரிந்து வந்த தேவநம்பியதீச மன்னனை சந்தித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெற்றது.



## முதன் முதலில் இலங்கைக்கு பௌத்தம் அறிமுகமான பொசன் போயா தினம்

கலிங்கப் போரில் தன்னை எதிர்த்துப் போராடிய எதிரிநாட்டு படைகளை போர்முனையில் படுதோல்வியடையச் செய்த சக்கரவர்த்தி அசோகன் அன்றிரவு போர்க்களத்திற்கு சென்று போரினால் ஏற்பட்ட இழப்புக்களை கண்காணித்துக் கொண்டிருந்த போது போர் வீரர்கள் பலர் அங்கவீனர்களாகவும் குற்றுயிராயும் அவஸ்தைப்படுவதையும், ஒரு வயோதிபப்பெண் ஒரு இளம் போர்வீரரின் சடலத்தை தனது மடியில் வைத்து கண்ணீர்விட்டு அழுது கொண்டிருந்த காட்சியையும் பார்த்து மனம் நெகிழ்ந்தார்.

கவலையுற்ற அசோகச் சக்கரவர்த்தி, "ஏன் அம்மா அழுகிறீர்கள்?" என்று கருணையுடன் கேட்டிருக்கிறார்.

அப்போது, போர்முனையில் எங்கள் நாட்டை ஆக்கிரமித்த வெளிநாட்டுப் படையினர் எனது மகனை கொன்றுவிட்டார்கள் என்று தெரிவித்த அந்த வயோதிப மாது, "நீங்கள் யார்?" என்று அசோகச் சக்கரவர்த்தியிடம் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சக்கரவர்த்தி "நான்தான் சாம்ராட் அசோகச் சக்கரவர்த்தி" என்று பதிலளித்தவுடன், கொதித்தெழுந்த அந்த வயோதிபமாது, "நீ ஒரு சக்கரவர்த்தி அல்ல. அப்பாவி உயிர்களைப் பலியெடுக்கும் மிருகம்" என்று அழுது கொண்டே மயக்கமடைந்தார். இந்தச் சம்பவங்களினால் மனம் நொந்துபோன அசோகச் சக்கரவர்த்தி செய்வதறியாது "இத்தனை உயிர்களைப் பலிகொண்டு கலிங்கப் போரில் நான் அடைந்த வெற்றியினால் எதனை சாதிக்கப் போகிறேன்?" என்று நிலைதடுமாறி வேதனையில் மூழ்கியிருந்த போது அவருக்கு புத்தபெருமானின் நற்போதனைகளின் உண்மைத் தத்துவத்தை புரிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

அன்று முதல் அசோகச் சக்கரவர்த்தி யுத்தம், இரத்தக் களரி, கொலை போன்ற தீய எண்ணங்களை அடியோடு துறந்ததுடன், பௌத்த மதத்தைத் தழுவி பௌத்த மதத்தின் நற்போதனைகளைப் பரப்பும் பணியை ஆரம்பித்தார்.

இதனைத் தொடர்ந்து அரச குடும்பமே பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டது. உடனடியாகவே மகன் மஹிந்த மற்றும் மகள் சங்கமித்தையை புத்த சமயத்தைப் பரப்பும் பணியில் ஈடுபடுத்தினார். காவி உடையணிந்து பௌத்த தர்மத்தை உலகத்திற்கு பரப்பும் பணிக்காக துறவறம் பூண்ட அரஹட் மஹிந்த இலங்கைக்கு வந்து மன்னன் தேவநம்பிய தீசனை சந்திக்கச் சென்ற போது, மன்னன் மிஹிந்தலை மலையுச்சியில் மான் வேட்டையாடிக் கொண்டிருப்பதை அவதானித்தனர்.



தேவநம்பிய தீச மன்னனை அணுகிய இவ்விரு துறவிகளும் பௌத்த தர்மத்தை அவரிடம் போதித்து, கருணாமூர்த்தி புத்தபெருமானின் போதனைக்கு அமைய கருணையுள்ளம் கொண்ட வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று போதனை செய்தனர். இவர்களின் இந்த பௌத்த போதனையை கேட்டு மனம்மாறிய தேவநம்பியதீச மன்னன் மிருகங்களை வேட்டையாடுவதை அடியோடு கைவிட்டு பௌத்த தர்மத்தை தனது பல்லாயிரக்கணக்கான மக்கள் சகிதம் ஏற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வே இலங்கையில் பௌத்த தர்மம் தழைத்தோங்குவதற்கான ஆரம்பமாகும். அசோகச் சக்கரவர்த்தி இலங்கைக்கு போதனை செய்த பௌத்த தம்மம் சீனா, ஜப்பான், தூரகிழக்கு நாடுகள் உட்பட பல நாடுகளுக்கும் பரவிய போதும் இலங்கையில்தான் பௌத்த தர்மம் வலுவாக நிலைகொண்டது. இதனையடுத்து இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் அனைவரும் பௌத்த விகாரைகளையும், பௌத்த தூபிகளையும் நாடெங்கிலும் நிர்மாணித்தனர். மிஹிந்தலை மலையில் முதன் முதலில் தேவநம்பியதீச அரசனைச் சந்தித்த மஹிந்த தேரர், பௌத்த தர்மத்தின் தத்துவத்தை அவர் புரிந்து கொண்டிருக்கிறாரா என்பதை அறிந்து கொள்வதற்கும் பல கேள்விகளை எழுப்பினார். "நாம் உண்மைத் தத்துவத்தை உலகத்திற்கு உபதேசித்த ஒரு பெரியாரின் நாட்டிலிருந்து இங்கு வந்திருக்கிறோம்" என்று கூறி பௌத்த தர்மத்தை போதித்த போது அதனை தேவநம்பியதீச மன்னன் ஏற்றுக் கொண்டு அன்றிலிருந்து பௌத்த தர்மத்துக்கு அமைய தன்னுடைய மற்றும் நாட்டு மக்களுடைய வாழ்க்கையை மாற்றியமைத்தார்.

அந்தச் சம்பவத்தினால் பௌத்த தர்மத்தின் மீது நம்பிக்கை கொண்ட அரச குடும்பத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் இலங்கையில் துறவறம் பூண்டு நாடெங்கிலும் பௌத்த தர்மத்தை பரப்பினர். இந்த நிகழ்வு இலங்கையில் கலாசார மாற்றத்துக்கும்,, விழுமியவாழ்க்கை முறைக்கும் வழிகோலியது.

அசோகச் சக்கரவர்த்தியின் மகள் சங்கமித்தை தேரர் இலங்கைக்கு வந்தபோது கொண்டுவந்த புத்த பெருமான் புனிதத்துவம் அடைந்த அரசமரத்தின் கிளையொன்றை அனுராதபுரத்தில் நாட்டி வைத்தார். இலங்கையில் புத்தசமயம் அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவு கூர்ந்தார். இந்தக் கிளை இன்று ஒரு பெரிய புனித விருட்சமாகியுள்ளது. பௌத்த தர்மம் இலங்கைக்கு அறிமுகமாகிய பொசன் போயா தினம் புதியதோர் கலாசாரத்தையும் அமைதியான வாழ்க்கையையும் அமைத்துக் கொள்வதற்கு மக்களுக்கு ஒரு சிறந்த அடித்தளமாக அமைந்துள்ளது.

சிறப்பு நிறைந்த பௌத்தத்தை இலங்கைக்கு வழங்கிய பெருமைக்குரிய நாடு இந்தியா ஆகும்.

ஆசையே துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் என்னும் தத்துவத்தை உலகிற்கு போதித்து பௌத்த மதத்தை தோற்றுவித்து மக்கள் யாவரும் முக்தி அடைய ஒரு எளிதான வழியைக் காட்டியவர் புத்த பெருமான் ஆவார்.

# இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சீனாவின் மின்சக்தித் திட்டங்கள்!



இலங்கையின் சக்திவளத்துறை மீது சீனாவுக்கு எப்போதுமே தனியான அக்கறை உள்ளது. மின்னுற்பத்தித் திட்டங்கள் மற்றும் எரிபொருள் விநியோகத்துறையில் சீனா எப்போதுமே தலையீடு செய்து வருகின்றது. அதுவும் இந்தியாவுக்கு ஏட்டிக்குப் போட்டியாக இலங்கையில் முதலீடுகளில் பெரிதும் அக்கறை காண்பித்து வருகின்றது சீனா.

பாரிய மின்சார உற்பத்தித் திட்டங்களில் முதலீடு செய்வதிலும், அதன் கட்டுமானப் பணிகளிலும் சீனா ஆர்வம் காட்டி வருகின்றது. சீனாவின் கட்டுமானங்களில் நுரைச்சோலை அனல்மின் நிலையமும் ஒன்றாகும். ஆனாலும் நுரைச்சோலை அனல்மின்நிலையமானது எதிர்பார்த்த பயனைத் தரவில்லை.

நுரைச்சோலை அனல்மின்நிலைய உபகரணங்கள் அடிக்கடி பழுதடைவதால் மின்விநியோகம் தடைப்படுவது தெரிந்த விடயம். நுரைச்சோலை அனல்மின்நிலையத்தைப் பொறுத்தவரை சீனாவின் கட்டுமானங்கள் தரமானதாக இல்லையென்பது பொதுவான குற்றசாட்டாக உள்ளது.

இலங்கையின் வடபகுதியிலுள்ள மூன்று தீவுகளில் மின்சக்தித் திட்டங்களை ஸ்தாபிப்பதற்கு சீனாவினால் 2021ஆம் ஆண்டு யோசனையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தை அண்மித்துள்ள நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகியவற்றில் மின்சக்தி கட்டமைப்புக்களை ஸ்தாபிப்பதற்கான திட்டம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சீன நிறுவனமான சினோ சோ ஹைப்ரிட் டெக்னோலஜியிடம் வழங்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனாலும் இந்தத் திட்டம் தொடர்பில் இந்தியா இலங்கைக்கு தனது கவலையை வெளியிட்டிருந்தது. இந்தத் திட்டம் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், குறித்த திட்டத்தை நிறுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் பின்னர் நடவடிக்கை எடுத்திருந்தது.

இலங்கைக்குள் தனது கால்களை நன்றாக ஊன்றிக் கொள்வதில் சீனா மிகுந்த பிரயத்தனப்படுவது நன்றாகவே தெரிகின்றது. சீனாவிடம் இலங்கை அதிகதொகை கடன் வாங்கியுள்ளதால், அதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளலாமென சீனா கருதுகின்றது. ஆனால் இலங்கைக்கு சீனா பெருந்தொகை கடனை கொடுத்திருந்தாலும், இலங்கை எப்போதெல்லாம் பாதிக்கப்படுகின்றதோ, அப்போதெல்லாம் உதவி ஒத்தாசைகளை இந்தியா நல்கி வருகின்றது.

சீனாவின் யுனான் மாகாணத்தின் ஆளுநர் சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு அவர்

**சீனாவின் கட்டுமானங்களில் நுரைச்சோலை அனல்மின் நிலையமும் ஒன்றாகும். ஆனாலும் நுரைச்சோலை அனல்மின்நிலையமானது எதிர்பார்த்த பயனைத் தரவில்லை**

விஜயம் செய்திருந்தாலும், கிழக்குக்கான அவரது விஜயத்தை இந்தியா கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது. சீனா தனது யுனான் மாகாணத்தின் ஒரு சகோதர மாகாணமாக கிழக்கு மாகாணத்தை தத்தெடுத்து அங்கு தனக்குரிய சில நகர்வுகளை அபிவிருத்தி என்ற பேரில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எவ்வாறிருந்த போதிலும், சீனாவின் சக்திவளத் திட்டங்கள் எதிர்பார்த்தவாறு வெற்றியளிக்கவில்லை என்பதற்கு நுரைச்சோலை அனல்மின்நிலையம் ஒரு உதாரணமாகும். இலங்கையின் ஒரேயொரு நிலக்கரி மின் உற்பத்தி நிலையமான 'லக்விஜய' என்று அழைக்கப்படும் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் 2006 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டத்திலுள்ள நுரைச்சோலையில் ஆரம்பிக்கப்பட்டது.

900 மெகாவாட் திறன் கொண்ட இந்த நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத் திட்டத்தின் முக்கிய ஒப்பந்ததாரர் சீனாவின் சைனா மெஷினரி என்ஜினியரிங் கோர்ப்பரேஷன் (China Machinery Engineering Corporation CMEC) ஆகும்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத் திட்டத்திற்கு சீனாவின் எக்ஸிம் வங்கியே கடனுதவி அளித்துள்ளது. இந்தக் கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பை இலங்கை மின்சாரசபை ஏற்காமல், திறைசேரியே ஏற்றிருக்கிறது. அதாவது திறைசேரிக்கு மேலும் ஒரு சுமையாக மாறிய ஒரு திட்டமாக இந்த நுரைச்சோலை அனல் மின்நிலைய திட்டம் உள்ளது. நாட்டின் மின்தேவையின் ஐம்பது சதவீதத்தை இந்த அனல்மின் நிலையம் பூர்த்தி செய்வதாக கூறப்படும் நிலையில், அதன் மின்சார உற்பத்தியில் அடிக்கடி ஏற்படும் தொழில்நுட்ப கோளாறுகளும், இலங்கைக்கு தாக்குப் பிடிக்காத அதன் உற்பத்தி செலவினங்களும் இலங்கைக்கு ஒரு நெருக்கடியை தோற்றுவித்திருக்கின்றன.

இலங்கையின் பொருளாதாரத்தால் ஈடுகொடுக்க முடியாத, தொழில்நுட்பக் கோளாறுகள் அதிகம் கொண்ட, பராமரிக்க முடியாத, ஒரு 'வெள்ளை யானையாக' சீனா உருவாக்கித் தந்த இந்த அனல்மின்நிலையம் இருப்பதாகவே பலரும் கருதுகின்றனர்.

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இலங்கையில் சீன முதலீடுகளால் கட்டமைக்கப்பட்ட ஏனைய திட்டங்களைப் போலவே இந்த அனல்மின்நிலைய திட்டமும் ஒரு சுமையாகவும், சர்ச்சையாகவும் உள்ளது எனக் கூறப்படுகின்றது.

இந்த அனல்மின்நிலையம் உருவாக்கப்பட்டதில் இருந்தே, அதன் தொழில்நுட்ப செயற்பாடுகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டு வந்திருக்கின்றன. நிலக்கரியால் இயக்கப்படும் இந்த அனல்மின்நிலையம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு மட்டுமல்லாமல், சூழலுக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலை வழங்கும் ஒன்றாக உள்ளது.

உலகின் மிக முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள பருவநிலை மாற்றத்துக்கு நிலக்கரியை எரிப்பது முக்கிய காரணமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் நிலக்கரி அனல் மின்நிலையங்களை இனி எந்த நாட்டிலும் அமைக்கப் போவதில்லை என்று சீனா முன்னர் அறிவித்திருந்தது. என்றாலும் இலங்கை போன்ற பல நாடுகளில் சீனாவால் உருவாக்கப்பட்டிருக்கும் அனல் மின்நிலையங்கள் அந்தந்த நாடுகளின் மண்ணையும், காற்றையும், நீரையும் மாசுபடுத்தி வருவதாக சூழல் ஆர்வலர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

காலநிலை மாற்றத்தின் விளைவுகளிலிருந்து மீள்வதற்காக உலகம் மாற்றுவழிகளான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை நாடுகின்ற போது, சீனா அதற்கு மாறான சூழல் பாதிப்புத் திட்டங்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் முதலீடு செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகளைக் கொண்ட நாடாகும். இலங்கையின் அனைத்து பகுதிகளும் ஆண்டு முழுவதும் நல்ல சூரிய ஒளியைப் பெறுகின்றன. மேலும், நீர் மின்சாரம் மற்றும் காற்றாலை மூலம் மின்சார உற்பத்தியில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை இலங்கை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் சூழலை மாசுபடுத்தும் நிலக்கரி மின்உற்பத்தி நிலையமொன்றை உருவாக்கியமை பொருத்தமற்றதென்பதே சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்தாகும். தற்போது ஏற்பட்டுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகவும், நிலக்கரியின் எதிர்மறையான விளைவுகள் காரணமாகவும் பல நாடுகள் நிலக்கரியின் பயன்பாட்டை தவிர்த்து வருகின்றன. கந்தகம், நைதரசன் மற்றும் காபனீரொட்சைட் ஆகியவை நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து வெளிப்படும் நச்சுவாயுக்களாகும்.

இவை சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதோடு, மனித ஆரோக்கியத்தை பாதிப்படையச் செய்து மிகவும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இந்த நச்சுவாயுக்கள் மனித சுவாச அமைப்பு தொடர்பான நோய்களை உருவாக்குகின்றன.

எரியூட்டப்படும் நிலக்கரியினால் வெளியாகும் சாம்பல் கழிவுகள் மிகவும் ஆபத்தானவையாகும். இவற்றில் பாதரசம் போன்ற கன உலோகங்கள் அடங்கியுள்ளன, எனவே இவை மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழல் இருப்புக்கும் மிகவும் ஆபத்தானவையாக கருதப்படுகின்றன.

**எஸ். சாரங்கன்...**

# தமிழகனின் சுயவரலாறு நூல்: நதிக்கரைகளில் அவலவாழ்வு



'களுகங்கை முதல் காவிரிவரை' என்று தனது சுயவரலாற்றுக்குத் தலைப்பிட்டிருக்கிறார் தமிழகன். இரண்டு நதி தீரங்களை வரம்பிட்டுத்தான் தன் வாழ்வியல் கோலங்களை வரையமுற்பட்டிருக்கிறார் அவர். சிவனொளிபாத மலையில் ஊற்றெடுத்து, அடர்காடுகள், திரண்ட பாறைகள் என்று எண்பது மைல் தூரம் வளைந்தும் நெளிந்தும் இரத்தின புரிக்கூடாக ஓடி, களுத்துறையில் இந்துசமுத்திரத்தோடு சங்கமிக்கும் களுகங்கையிலிருந்து தன் பால்யகால வாழ்வை நினைவு மீட்டுகிறார் தமிழகன்.

'குன்றின் உச்சியில் படர்ந்திருக்கும் காடு. அந்தக் காட்டிலிருந்து வளைந்து, நெளிந்து, மேட்டில் இருந்து கீழே விழுந்து, பாறை இடுக்குகளில் சிறிதும் பெரிதுமாயிருந்த பள்ளங்களை நிரப்பிக் காட்டாறு ஓடிக்கொண்டிருக்கும். இது 54 ஏக்கரில் இருந்து கீழே இறங்கி கீழே உள்ள ஸ்டோரின் அருகில் ஓடி களுகங்கையிலே கலக்கும்' என்று நதியோட்டத்துடன் தன் வாழ்வோட்டத்தை இணைக்கிறார் இராமச்சந்திரன் என்ற தமிழகன்.

நதிகள் அவரை ஆகர்ஷித்திருக்கின்றன. நதிகள் இயற்கைக்கு எழில் சேர்த்திருக்கின்றன. உலகை நமக்கு வனைந்து தந்திருக்கின்றன. பிரபஞ்சத்தின் அனைத்துயிர்களுக்கும் ஆதாரமாக நதிகள் அமைந்திருக்கின்றன.

வாழ்வு தேடி, இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற தமிழகன் அங்கேயும் காவிரிநீர்ப் பரப்பில் வாழ்வைச் சுகிக்க முனைகிறார். தன் வாழ்வு இரண்டு நதிகளால் வரம்பிடப்பட்டிருப்பதாய்க் கனவு காண்கிறார்.

சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாகி , ஆறு தசாப்தங்கள் அண்மித்துவிட்டன. மூன்று தலைமுறைகள் உருவாகி விட்டன. இலங்கையில் நாடற்றவர்களாய், பின் இந்தியாவில் தாயகம் திரும்பிய தமிழர்களாய் ஐந்து இலட்சம் மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டில் தரிசித்த அவல வாழ்வினைப் பற்றிய அசலான பதிவாக தமிழகனின் இந்த நூல் அமைகிறது.

முதன்முதலாக, லட்சோப லட்சக்கணக்கில் தாயகம் திரும்பிய தமிழர்களின் சோகவரலாற்றைத் தன் சுயசரிதை வழியே பதிவிட்டுள்ள தமிழகனின் பணி வரலாற்றின்பாற்பட்டது. நாடுகள் தங்களுக்கிடையே செய்து கொள்கிற ஒப்பந்தங்களில், ரத்தமும் சதையுமாய் மனித ஜீவன்கள் எப்படி நசிந்து மாய்கிறார்கள் என்பதற்கு நல்ல சாட்சியமாய் தமிழகனின் சுயசரிதை அமைகிறது. சீரழிந்த அகதிவாழ்வின் சோககீதத்தை தமிழகன் இந்த சரிதையிலே மீட்டியிருக்கிறார்.

'தமிழ்க் காவிரி' என்ற சஞ்சிகையை அயராது தொடர்ந்து வெளியிட்டிருக்கிறார். 'தனியார் மயமாகும் தண்ணீர்' என்று சிவப்பு எச்சரிக்கை விட்டிருக்கிறார். 'தாயகம் திரும்பியோர் வாழ்வுரிமை இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கிச் செயற்பட்டிருக்கிறார். சட்டத்துறையில் பயின்று தமிழகத்தில் வழக்கறிஞராக மிளிர்ந்திருக்கிறார்.



தாயகம் திரும்பிய தமிழர்கள் அனுபவித்த அவலத்தின் ஒட்டு மொத்தக் கதையின் சாரமாக அமைந்திருப்பதுதான் இந்த நூலின் தனிச் சிறப்பாகும்.

**மு.நித்தியானந்தன்...**

# பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழ துறைமுகநகரம் பெரிதும் பங்களிக்கும்



கொழும்பு துறைமுக நகரம், பிராந்தியத்தின் முதல் பல்வகை நாணய, சேவை ஏற்றுமதி விசேட பொருளாதார வலயமாக அதன் உயர்மட்ட செயற்பாட்டு நடவடிக்கையை எட்டவுள்ளது. 5 வருட வெளியீட்டுத் திட்டமானது 5.6 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையை வெளிநாட்டு நேரடி முதலீடாக எதிர்பார்க்கிறது. இது இலங்கையின் பொருளாதார மீட்சியை விரைவுபடுத்தும் என்பதுடன், துறைமுக நகரம் மற்றும் இலங்கை ஆகிய இரண்டையும் சேவை ஏற்றுமதித் துறையில் முன்னணி செயல்பாட்டாளராக நிலைநிறுத்தவுள்ளது.

"கொழும்பு துறைமுக நகரம் இலங்கையின் புதிய கட்ட வளர்ச்சிக்கு உதவும் என்பதுடன், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிஇறக்குமதி சமநிலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக இருக்கும். இப்பிராந்தியத்தினுள் நாட்டின் போட்டித்தன்மையை வலுப்படுத்தும் அதே வேளையில் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் செயல்பட ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மூலமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் எதிர்கால பொருளாதாரத்தை முன்னெடுப்பதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்" என்று CHEC Port City இன் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரான துல்சி அலுவிஹார கூறினார்.

மகாவலி அபிவிருத்திக்குப் பின்னர் இலங்கையின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமாகத் திகழும் துறைமுக நகரம், 140,000 க்கும் மேற்பட்ட நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருடாந்தம் 13.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

269 ஹெக்டேயர் கடலிலிருந்து மீளப்பெறப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள கொழும்பு துறைமுக நகரம் என்பது சேவைகளின் ஏற்றுமதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது விசேட பொருளாதார வலயமாகும். 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட விசேட பொருளாதார வலயம் உலகளாவிய மற்றும் பிராந்திய வர்த்தகம், கடல்சார் சேவைகள், வங்கி மற்றும் நிதி சேவைகள், தகவல் தொழில்நுட்பம், தொழில்முறை/அறிவு சேவைகள், நிறுவன தலைமையக செயற்பாடுகள், சுற்றுலாத்துறை மற்றும் பிற துணைச் சேவைகள் போன்றவற்றில் ஈடுபடும் வணிகங்களை ஈர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது.

திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் தொகை பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. இது 12,000 நேரடி வேலைவாய்ப்புக்களை உருவாக்கியுள்ளதுடன், 20 க்கும் மேற்பட்ட இலங்கை துணை ஒப்பந்ததாரர்கள் மூலமாக 4,000 இலங்கை தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் திறமையான தொழிலாளர்கள் புலம்பெயரத் தூண்டும் நிலையில், கொழும்பு துறைமுக நகரமானது ஒரு சேவை ஏற்றுமதி மையமாக, நவீன சேவைகளில் 70% க்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வலயத்திற்குள் உலகளாவிய வர்த்தகநாமங்களை செயல்படச் செய்வதற்கான கதவுகளைத் திறக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 600 சுற்றுலாப் பயணிகளுடன் ...

மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து 600 சுற்றுலாப் பயணிகளுடன் வந்த முதலாவது அதிசொகுசுக் கப்பல் எம்.வி. எம்பிரஸ், காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலில் வந்த இந்திய சுற்றுலாப் பயணிகளை அமைச்சர்கள் அடங்கிய குழாம் வரவேற்றதுடன், கப்பலின் கப்டனுக்கு நினைவுப்பரிசிலும் கையளிக்கப்பட்டது.இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா,

"காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கிடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இராமேஸ்வரம் பகுதியில் சில வேலைத்திட்டங்களை கப்பல் சேவை ஆரம்பிக்க முன்னர் முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இதன் காரணமாக தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனினும், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் தொடர் முயற்சியின் பயனாக விரைவில் கப்பல் சேவை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன" என்றார்.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், கப்பல்துறை அமைச்சின் செயலர், துறைமுகங்கள் அதிகார சபையின் அதிகாரிகள், வட பிராந்திய கடற்படை தளபதி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், கடற்படை உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கையில் இனவழிப்பு...

அவற்றின் நிலைப்பாடு மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடாகாதெனவும், கனடா வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கனேடிய வெளிவிவகார அமைச்சை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

கனேடிய பிரதமரின் கருத்து எவ்வாறெனினும், கடந்த மே மாதம் 18ஆம் திகதி இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றதென்ற தொனியில் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கருத்து வெளியிட்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

கனேடிய பாராளுமன்றத்தில் மே 18ஆம் திகதியை தமிழ் இன அழிப்பு தினமாக அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதெனவும், அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாகவும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிராகரித்தது. இது தொடர்பாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தது. இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையில் தமிழர் இன அழிப்பு இடம்பெற்றதாக கண்டறியப்படவில்லையென, வெளிவிவகார அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நாட்டில் புலம்பெயர் தமிழர்கள் ...

"இலங்கையில் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக கலந்துரையாடினேன். குறிப்பாக, இலங்கையில் நிரந்தரமான சமாதான நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக கூடிய கரிசனைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரினேன்.

இதேவேளை, டென்மார்க்கில் வாழ்கின்ற 2 ஆயிரம் பேர் வரையான புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு தடையாகவுள்ள டென்மார்க் அரசாங்கத்தால் வழங்கப்படும் அகதிகளுக்கான பயண ஆவணம் அல்லது கடவுச்சீட்டு (அலையன்ஸ் கடவுச்சீட்டு) ஆகியவற்றுக்கு இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடைகளை நீக்க வேண்டுமென்று கோரினேன்.

டென்மார்க்கிலுள்ள எமது பிரஜைகள் தமது தாய்நாட்டைப் பார்ப்பதற்காக இலங்கைக்கு வருகை தருவதற்கு தயாராகவுள்ளனர். அத்துடன், முதலீடுகளைச் செய்வதற்கும் முன்வந்துள்ளனர். அவற்றினூடாக இலங்கைக்கு அந்நிய செலவாணி வருமானம் கிடைப்பதற்கு சாத்தியமான நிலைமைகள் உள்ளன.

ஆகவே, அவர்கள் இலங்கைக்கு பிரவேசிப்பதற்குரிய தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் கோரினேன். அக்கோரிக்கைகளை சாதகமாக பரிசீலிப்பதாக அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவும் தெரிவித்துள்ளனர்" என்றார்.

## டொலரின் விற்பனை ...

ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலை 5,97,908 ரூபாயாக நேற்று பதிவாகியது. 24 கரட் தங்கப் பவுணின் விலை 1,68,750 ரூபாயாக பதிவாகியுள்ளதோடு, 22 கரட் தங்கப் பவுண் ஒன்றில் விலை 154,750 ரூபாயாகவும் 21 கரட் தங்கப் பவுண் ஒன்று 1,47,700 ரூபாயாகவும் பதிவாகியது.

## சிரேஷ்ட தொழிற்சங்கவாதி...

உடல்நலக் குறைவால் சில வருடங்களாக அவர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவில்லை. கொழும்பு, பம்பலப்பிட்டியிலுள்ள வீட்டில் தங்கியிருந்த போதே அவர் காலமானார்.அன்னாரின் ஜனாசா கொழும்பு, தெமட்டகொடை, குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியில் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

## வாகன இறக்குமதிக்கு...

ஒரே தடவையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எரிபொருள் கொள்வனவுக்காக வழங்கப்படுகிறது. வர்த்தக சந்தையிலிருந்தும் மத்திய வங்கியிலிருந்தும் அது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால், டொலரின் பெறுமதி சற்று உயர்வடைந்துள்ளது.

எமது நாட்டில் ஒரு தரப்பினர் டொலர் மூலமாகவே முதலீடுகளை செய்து வருகின்றனர். அவர்களும் டொலர்களை கொள்வனவு செய்ய ஆரம்பித்து விட்டனர்.

அதனால்தான் ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்து டொலரின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளது. அதனால், நேற்று முன்தினம் 320 ரூபாயாகவும் நேற்று 306 ரூபா என்ற நிலைக்கும் டொலர் சென்றுள்ளது. எனினும், இது மோசமான நிலை கிடையாது.

கேள்வி மற்றும் விநியோகத்தை அடிப்படையாகக் கொண்ட சாதாரண நிலையே இது. எரிபொருளுக்காக 80 மில்லியன் டொலர்வரை செல்லும் போது, டொலரின் பெறுமதியில் அது அழுத்தம் கொடுக்கின்றது. இத்தகைய நிலையில் எந்த வகையிலும் வாகன இறக்குமதிக்கு இடமளிக்கப்பட மாட்டாது" என்றார்.

## இரண்டு பஸ்கள் ...

மன்னாரிலிருந்து தியத்தலாவை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் மற்றும் பொரளந்தையிலிருந்து பாடசாலை மாணவர்களுடன் பண்டாரவளை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் பாடசாலை மாணவர்கள் ஐவர் மற்றும் பாடசாலை பஸ்ஸின் சாரதி ஆகியோர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். சம்பவம் தொடர்பாக தியத்தலாவை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் கோர விபத்தில்...

வீதியோரத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்த தாயும் மகளும் கன்டர் ரக வாகனம் மோதியதில், சம்பவ இடத்தில் உடல் நசுங்கிப் பலியாகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (16) காலை 7.00 மணியளவில் இடம்பெற்றது.

கன்னாட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது

சிவலோகநாதன் சுபோகினி மற்றும் இவரது 6 வயது மகள் டினுசிகா ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கன்னாட்டி பிரதேசத்திலிருந்து பூவரசங்குளம் பாடசாலைக்கு செல்வதற்காக வீட்டுக்கு முன்பாகவுள்ள வீதியில் பஸ்ஸுக்காக இவர்கள் இருவரும் காத்திருந்தனர். இதன் போது, வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி வேகமாக பயணித்த கன்டர் ரக வாகனம் வீதியை விட்டு விலகிச் சென்று, வீதியோரத்தில் நின்ற இருவர் மீதும் மோதியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வேளையில் மற்றொரு சிறுவன் கன்டர் ரக வாகனத்தைக் கண்டதும் ஓடிச்சென்று விபத்தை தவிர்த்துக்கொண்டதாக, விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

கன்டர் ரக வாகனத்தில் பயணித்த மூவரில், ஒருவர் விபத்தையடுத்து தப்பிச்சென்றதுடன், ஏனைய இருவரையும் ஊர் மக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

விபத்தையடுத்து கன்டர் ரக வாகனத்தை பொதுமக்கள் சராமாரியாக தாக்கி சேதப்படுத்தியதுடன், அதை எரிக்க முற்பட்டனர். இதனால், அப்பிரதேசத்தில் சிறிதுநேரம் பதற்ற நிலை நிலவியதுடன், மன்னார் வீதியூடான போக்குவரத்தும் சிறிதுநேரம் பாதிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று நிலைமையை கட்டுப்படுத்தினர்.

விபத்து தொடர்பாக பறையனாளன்குளம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## மாறுபட்ட நிலைப்பாட்டாளர்கள்...

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீங்கள் ஏன் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்தீர்கள்? ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் அதற்கு எதிர்மறையாகக் கருத்து வெளியிடவில்லையா? என்று எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்துள்ள பதிலிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது,

"அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் 13ஆவது திருத்தத்தின் உடனடி அமுலாக்கத்துக்கு இணங்கியுள்ளன. தமிழ் காங்கிரஸ் மாத்திரமே அதனை நிராகரித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் காங்கிரஸ் உள்ளடங்கலாக பதிவு செய்யப்பட்ட 13 தமிழ்க் கட்சிகள் உள்ளன.

தமிழ் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய 12 கட்சிகளில் 7 கட்சிகள், தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வாக இல்லாவிட்டாலும் கூட, 13ஆவது திருத்தத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்று ஆவணமொன்றில் கையெழுத்திட்டு, ஜனாதிபதியிடம் கையளித்துள்ளன. 8ஆவது கட்சி அந்த ஆவணத்தில் கையெழுத்திடா விட்டாலும், அதற்கு இணங்கியுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய எஞ்சிய 4 கட்சிகளும் ஜனாதிபதிக்கான கடிதத்தில் கையெழுத்திடா விடினும், அக்கட்சிகள் இதே கோரிக்கையை முன்வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தன.

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இந்தியப் பிரதமர் தலையிட வேண்டுமென்றும் அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே, 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென்ற விருப்பம் 12 கட்சிகளுக்கும் பொதுவானதாகும்.

தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு எனும் விடயத்தில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் சமஷ்டி முறையின் வடிவங்களை தமது இறுதி இலக்காகக் கொண்டிருக்கின்றன. தமிழ் காங்கிரஸ் உள்ளடங்கலாக எந்தவொரு கட்சியும் பிரிவினையைக் கோரவில்லை. ஆகவே, அரசியலமைப்பில் ஏற்கெனவே உள்வாங்கப்பட்டுள்ள சரத்தின் அமுலாக்கத்தை முன்னிறுத்தி அரசாங்கத்துடன் ஒருங்கிணைவதை ஏனைய தமிழ்க் கட்சிகள் விரும்பத்தகாத விடயமாக நோக்கக்கூடாது.

தம்மிலிருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களை துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவர்களாகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதோவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்து விட்டது. குறித்தவொரு நபர், எமது நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், அவர் என்ன கூறுகின்றார் என்பதை புரிந்துகொள்வதற்கு பொறுமை அவசியமாகும். மாறாக, அத்தகைய மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களை துரோகிகளாக சித்தரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் புத்திஜீவிகள், எமது அரசியல் இலக்குகள் எத்தகையதாக அமைய வேண்டுமென்ற கருத்தாடலையும் தர்க்கத்தையும் எம்மக்கள் மத்தியில் உருவாக்குவது பெரிதும் பயனுடையதாக அமையும். சமஷ்டி முறைமையை பரிந்துரைப்பவர்கள், அதனை ஆதரிப்பதற்கான விடயங்களைக் கொண்டிருப்பர். இருப்பினும், சமஷ்டியை பிரிவினையென்று நம்பும் சிங்கள பேரினவாத அரசாங்கத்துக்கு இது தொடர்பாக பொறுமையாக அறிவூட்ட வேண்டும். எனவே, 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதென்பது இப்பாதையை நோக்கிய முதற்படியாக அமையும்" என்றார்.

## ஒருபோதும் கருத்துரிமையை... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் பங்கேற்றார். அதனால், ஊடகவியலாளர் இங்கு வந்து "ஊடக அமைச்சர் ஊடகங்களை அழிக்கப் போகிறார், தென்கொரியாவை போன்ற நிலைமையை உருவாக்க போகிறார்" என எதிர்ப்பு போராட்டம் செய்வார்களென நினைத்தேன்.

ஊடகங்கள் ஏன் இவ்வாறு செயற்படுகின்றன என எனக்குத் தெரியவில்லை. எமது தண்டனைச் சட்டக்கோவையில் குற்றவியல் அவதூறுச் சட்டம் காணப்பட்டது. நானே அதனை நீக்கினேன். ஆசிய வலயத்தின் எந்தவொரு நாடும் அதனை நீக்கியிருக்கும் என நான் நினைக்கவில்லை.

இவ்வாறிருக்க, பாதுகாக்கப்பட்ட கருத்துரிமையை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் எதற்காக முன்னெடுக்கப்படுகின்றன. எவருக்கும் அதனை நீக்குவதற்கான அவசியமில்லை. இங்குள்ள அனைவரையும் விட ஊடகங்களுடன் நெருக்கமான தொடர்பு எனக்கு உள்ளது. அதனால், கருத்துரிமையை பறிக்கும் நோக்கம் எவருக்கும் இல்லை.

இங்குள்ள பிரச்சினை மாறுபட்டதாகும். ஊடகங்களால் அநீதி ஏற்படும் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தை சகல நாடுகளும் கொண்டுள்ளன.

இங்கு அரச ஊழியர்கள் இருக்கின்றனர். இவர்களில் எத்தனை பேருக்கு இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக அவதூறு ஏற்படுத்தப்பட்டிருக்கும். சில நேரங்களில் இலத்திரனியல் ஊடகங்கள் ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுகின்றன. இதனால் அவர்களுக்கு கிடைக்கப்போகும் நிவாரணம் என்ன, பொதுமக்களுக்கு மாத்திரமின்றி எனக்கும் அந்த பிரச்சினை உள்ளது" என்றார்.

## இன நல்லிணக்கம் ஏற்பட நாட்டு...

கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"தேசிய ஒருங்கிணைப்பை பாதுகாக்கத் தேவையானளவு சட்டதிட்டங்கள் இருக்கின்றன. சமத்துவத்தை உறுதிப்படுத்த தேவையானளவு உறுப்புரைகள் எமது அரசியலமைப்பில் இருக்கின்றன. இவை அனைத்தும் இருந்தும், எமது நாடு அடிக்கடி இரத்த ஆற்றில் நிரம்பி வழிகின்றது.

1971 கலவரத்தில் 60 ஆயிரம் பேர்வரை மரணித்தனர். 1983, 1988 கலவரங்களில் மேலும் ஆயிரம் பேர்வரை மரணித்தனர். வடக்கு, கிழக்கு பிரிவினைவாத யுத்தம் காரணமாக மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறான நிலையில், எங்களுக்கு எதிர்காலம் தொடர்பாக கனவு காண முடியுமா?

இவ்வாறான கலாசாரம் இருக்கும் நாடொன்றில் நாங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தாலும், சட்டத்தில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டாலும், நாட்டு மக்களின் எதிர்கால பரம்பரையின் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

நாங்கள் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த அனைத்து விடயங்களையும் செய்வதுடன், நாட்டு மக்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறில்லாமல், எந்த பயனும் இல்லை.

இந்த நாட்டில் வாழும் மக்கள் எமது சகோதரர்கள், எமது பிள்ளைகள் எனும் உணர்வு இருக்க வேண்டும். அந்த உணர்வை ஏற்படுத்திக் கொள்ளும்வரை எமது நாட்டு மக்களின் வாழ்க்கைக்கான பாதுகாப்பு தொடர்பாக சிந்திக்க முடியாது.

எமது நாட்டு மக்கள் பல்வேறு வகையில் பிளவுபட்டிருக்கின்றனர். சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றும் ஸ்ரீலங்கா, யூ.என்.பி. ஜே.வி.பி. என்றும் கலாசார ரீதியிலும் பிளவுபட்டிருக்கின்றனர்.

ஏன் நாங்கள் இவ்வாறு பிளவுபட்டிருக்கிறோம்.

மக்களை பிளவுபடுத்தவா ஜனநாயகம் தேவை? ஜனநாயகத்துக்கு மிகவும் இலகுவான வரைவிலக்கணம் பன்முகத்தன்மையின் மூலம் ஒருமைப்பாட்டுக்கு வருவதாகும்.

ஆனால், நாங்கள் அதற்கு அப்பாற்பட்ட விடயங்களே செய்கிறோம்.

அதனால், நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப நாங்கள் இந்த நாட்டு மக்களின் சிந்தனை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தியேயாக வேண்டும்" என்றார்.

## குருந்தூர் விகாரைக்கு...

தெரிவித்த கருத்துக்கமைய, தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி வண. எல்லாவல மேதானந்த தேரர் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தனது நிலைப்பாட்டை அறிவித்திருந்தார்.

விகாரைக்கு சொந்தமில்லாத காணிகளை பொதுமக்களிடம் கையளிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிந்தது.

விகாரையை சுற்றிலும் பல்வேறு பௌத்த விகாரைகளின் இடிபாடுகள் சிதறிக் கிடப்பதால், அங்குள்ள காணிகளை பகிர்ந்தளிப்பது பொறுத்தமற்றதென, கலாநிதி வண. எல்லாவல மேதானந்த தேரர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தற்போதைக்கு அரச காணிகளை பகிர்ந்தளித்தாலும், பகிர்ந்தளிக்காவிட்டாலும் தவறாக பலவந்தமாக காணிகள் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக அறிய முடிந்தது. அதனால், மேற்படி காணிகளின் உரிமத்தை பிறருக்கு வழங்கக்கூடாதெனவும் அவரது கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதியின் செயலாளரால், தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி வண. எல்லாவல மேதானந்த தேரருக்கு கடந்த 15ஆம் திகதியிடப்பட்டு பதில் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

குருந்தூர்மலை விகாரை, இலங்கையர்களான எமது தொல்பொருள் சின்னமாகும். அதனால், குருந்தூர் மலை விகாரையின் காணிகளை ஏனையவர்களுக்கு வழங்குவதற்கான தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் போது, 1985 களில் காடுகள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு பகுதிகளாக அறிவிக்கப்பட்ட இடங்கள் அவ்வண்ணமே பாதுகாக்கப்பட வேண்டுமென்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பதில் கடிதத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 2023.06.08 அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது, குருந்தூர்மலை விகாரை மற்றும் திரியாய் பிரதேச விகாரை இடிபாடுகள் ஆகிய இரண்டையும் பற்றி ஆலோசிக்கப்பட்டதெனவும் ஊடகங்கள் இவ்விடயம் தொடர்பாக மேற்கொண்ட தவறான அறிக்கையிடலே பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளதாகவும் குருந்தூர்மலை விகாரையை அண்மித்த விவசாயக் காணிகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக தேடியறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அறிந்துகொண்டு அவற்றை மாவட்ட செயலாளரின் பொறுப்பின் கீழ் வைத்துக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், நேபாளத்தின் லும்பினி மகாதேவி விகாரையின் அகழ்வு பணிகளை நடத்திய பேராசிரியர் ரொபின் கனின்ஹேமின் உதவிகளை பெற்றுக்கொண்டு மகா விகாரை பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலாளரால் தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி வண. எல்லாவல மேதானந்த தேரருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பதில் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அழகுசாதன பொருட்களால்... 03ஆம் பக்கத் தொடர்

புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக, தோல் நோய் விசேட வைத்திய நிபுணர்கள் நிறுவனத்தின் தலைவர், விசேட வைத்தியர் சிறியானி சமரவீர தெரிவித்தார்.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அழகுசாதனப் பொருட்களை மாத்திரம் பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முகத்தை வெண்மையாக்கும் முகப்பூச்சுகள் உடலில் செல்களை சேதப்படுத்தி புற்றுநோயை ஏற்படுத்துமென, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தோல் நோய் தொடர்பான விசேட வைத்தியர் இந்திரா கஹாவிட்ட தெரிவித்தார்.

## வலி. வடக்கில் காணி... 03ஆம் பக்கத் தொடர்

கலந்துரையாடல், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில், எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு தங்களின் கருத்துகளை வெளியிட்டிருந்தனர். அவ்வாறு கருத்து வெளியிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எமது பிரதேசத்தில் புனர்வாழ்வு மையமொன்றின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர்.

என்னுடைய நிலைப்பாடும் அதுவாகவே இருக்கின்றது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன்" என்றார்.

## சர்வதேச பாடசாலைகள் மீது...

கலந்துரையாடப்பட்டது. அத்துடன், இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் உரிமைகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், சர்வதேச பாடசாலைகள் மற்றும் கல்வி அமைச்சின் கீழ் காணப்படாத பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான அளவுகோல்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவால் (National Education Commission) தயாரிக்கப்பட்டு வருவதாக இதன்போது புலப்பட்டது.

ஆசிரியர் இடமாற்றம் மற்றும் கல்வி ஆலோசனை சேவையில் (In service Advisors) காணப்படும் சிக்கல்கள் தொடர்பாகவும் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், அந்த சிக்கல்களை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவரால் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன், அரச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகவும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டதுடன், ஆங்கில மொழி மூலமான உயர்தர வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பது தெரியவந்தது. அதற்கமைய, மாணவர்களின் தொடர் கல்விக்கு இடையூறாகவுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை போக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு குழுவின் தலைவரால் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் தனியார் வகுப்புகளை நடத்தும் தனியார் ஆசிரியர்களின் தரம் தொடர்பாக குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன், அந்த ஆசிரியர்களின் தகுதிகள் மற்றும் தரம் தொடர்பாக சமூகத்தில் இடம்பெறும் கலந்துரையாடல் தொடர்பாகவும் குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி, தனியார் ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தி அவர்களின் தொழிலுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதே சிறந்ததென கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு குழு பரிந்துரைத்தது.

ஏனைய நாடுகளில் தனியார் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் அனுமதிப்பத்திரம் (Teaching License) வழங்கப்பட்டு, அந்தத் தொழிலுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்ததுடன், இலங்கையிலும் அவ்வாறானதொரு முறையை பின்பற்றுவது பொருத்தமானதென குழு மேலும் பரிந்துரைத்தது.

எனவே, இவ்வாறானதொரு முறையை தயாரிப்பதில் உடனடி கவனம் செலுத்தி, தனியார் வகுப்பு ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தி, அவர்களுக்கு சட்ட ரீதியாக தொழில் அங்கீகாரம் வழங்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான அசங்க நவரத்ன, முதிதா பிரிஷாந்தி, மஞ்சுளா திசாநாயக்க, பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோரும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல ஆகியோர் குழுத் தலைவரின் அனுமதிக்கமைய கலந்துகொண்டனர்.

அத்துடன், கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம் மற்றும் Association of International Schools of Sri Lanka (AISL) ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## வடபகுதி மாணவர்... 03ஆம் பக்கத் தொடர்

ஏனைய மாணவர்களையும் அழைத்து தூக்கில் தொங்கிய கயிறை வெட்டியதாக விசாரணைகளின் போது தெரியவந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து பொலிஸாரின் அறிவித்தலுக்கிணங்க, மரண பரிசோதனை அதிகாரி மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் அங்கு வருகை தந்ததாகவும் பரிசோதனையின் பின் அந்த மாணவனின் சடலம் களுபோவில போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். மாணவனின் மரணத்துக்கான காரணம் தொடர்பாக இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லையென்றும், பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றுமொரு மாணவரும் பேராதனை பல்கலைக்கழகத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் மாணவர்களுக்கான அக்பர் மண்டபத்தில் அவர் தங்கியிருந்த அறையின் மலசலகூடத்திலிருந்தே இவரது சடலம் மீட்கப்பட்டதாக, பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை அதனை நேரில் கண்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரிவுக்கு அறிவித்ததையடுத்து, அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

பேராதனை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மற்றும் பேராதனை பொலிஸாருமாக இணைந்து மேற்படி சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்த மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனவும், பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்



## காத்தான்குடியில் கவிதை நூல் வெளியீட்டு விழா

மட்டக்களப்பு குறூப் நிருபர்

கவிக்கோன் இல்மி அஹமட் லெப்பை எழுதிய குளிருக்கு அழும் மழை கவிதை நூல் வெளியீட்டுவிழா நாளை(18) ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் மத்திய கல்லூரி பரீட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகவும் ஓமான் நாட்டிற்கான முன்னாள் தூதுவர் ஓ.எல்.அமீர் அஜ்வத் மற்றும் பேராசிரியர் எம்.எம்.முஸ்தபா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். பல்வேறு நிகழ்வுகள் இதில் இடம் பெறவுள்ளது.

## கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் 520 பேருக்கு நியமனங்கள்

### கிழக்கு மாகாண ஆளுநர் வழங்கி வைப்பு





கல்வியற் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்துள்ள 520 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நேற்று (16) திருகோணமலையில் உள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சரான சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரல, விமல வீர திஸாநாயக்க மற்றும் பிரதான செயலாளர் M.P.S திஸாநாயக்க உட்பட பல்வேறு முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். கல்வியற் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்துள்ள ஆசிரியர்களுக்கே இந்நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## அல்–பஹ்ரியா பாடசாலைக்கு மின் இணைப்பு பொருட்கள் வழங்கல்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



அல் பஹ்ரியா 2003 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பழைய மாணவர்களால் மின் இணைப்புக்கான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு பகுதியில் மின்சார இணைப்பு இன்றி மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு அசௌகரியங்களை மேற்கொண்டு வந்தனர்.

இது விடயமாக பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பன விடுத்த வேண்டுகோளை ஏற்று "Real Champion 2k03"(பாடசாலையில் கல்வி கற்று 2003ஆம் வருடம் O/L பரீட்சை எழுதிய) மாணவர்கள் மேற்படி மின் இணைப்பு வசதிகளைச் செய்வதற்குரிய சுமார் 0.75 மில்லியன் நிதி உதவியினை வழங்கி வைத்தனர்.

மேற்படி நிதியுதவிக்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் (10) பாடசாலையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ அஸ்தர் உட்பட 2003ம் ஆண்டு க.பொ.த (சா/த) மாணவ பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## பெண்களின் தரமான உற்பத்திகள் சந்தைக்கு; மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



பெண் முயற்சியாளர்களின் தரமான உற்பத்தி பொருட்களை சர்வதேசத்திற்கு சந்தைபடுத்துவதற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திருமதி கீதா சுதாகரன் தலைமையில் மாநகர சபை பொது நூலக கேட்போர் கூடத்தில் (15) நடைபெற்றது.

கனேடிய தமிழர்பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் உள்ளூர் பெண் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களை சர்வதேச சந்தை வாய்ப்பிற்கு கொண்டுசெல்வதாக அமைந்தது.

இந்த நிகழ்வில் உள்ளூர் உற்பத்தியை பிற மாவட்டங்களுக்கும் மாகாணங்களுக்கும் எவ்வாறு சந்தைப்படுத்தலாம் சந்தைப்படுத்தலின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றை எவ்வாறு மேலாண்மை செய்வது தொடர்பாகவும் பெறுமதி சேர் பொருட்களாக மாற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற விடயங்கள் இங்கு ஆராயப்பட்டது.

## மட்டு. மாவட்ட ஹோட்டல் உரிமையாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஹோட்டல்களில் தங்குமிட வசதிகளை வழங்கும் விடுதி உரிமையாளர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்வு (15) நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வூட்டல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் விழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இணைந்து ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை மற்றும் அவர்களின் நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மாவட்டத்தில் தங்குமிட வசதிகளை வழங்கும் தனியார் ஹோட்டல் மற்றும் விடுதி உரிமையாளர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு என்றால் என்ன? அது தொடர்பான கொள்கை, சட்டம், ஹோட்டல்களில் சிறுவர்கள் தங்கும் போது அல்லது அவ்வாறான சம்பவங்களை எவ்வாறு கையாளுதல், எதிர்காலத்தில் 18 வயதிற்குக் குறைவானவர்களை எவ்வாறு அடையாளம் காணுதல், ஹோட்டல்களுக்கு சிறுவர்கள் வரும்போது அவர்களின் எதிர்கால நலன் குறித்து எவ்வாறு செயற்பட வேண்டும் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக சிறுவர் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளினால் தெளிவுபடுத்தப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை இலங்கேசன் இந்து மன்றத்தினால் அரங்கேற்றப்பட்ட சராசந்தன் போர் எனும் வடமோடி நாட்டுக்கூத்து புதன்கிழமை (14) இரவு களுதாவளையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. 23 ஆண்டுகளுக்குப் பின்னர் களுதாவளைக் கிராமத்தில் இவ்வாறானதொரு நாட்டுக்கூத்து அரங்கேற்றம் பெற்றது.
(படங்கள்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

## கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் அரையாண்டு அணிவகுப்பு மரியாதை

ஒலுவில் விசேட நிருபர்



கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2023 ஆண்டிற்கான அரையாண்டு அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை வியாழக்கிழமை (15) கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க கலந்து கொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.



கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு வழங்கும் முகமாக ஆளுநரின் பொது மக்கள் குறைதீர்க்கும் பிரிவு உத்தியோகபூர்வமாக நேற்று (16), கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலையிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

## O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான செயலமர்வு

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, அட்டாளைச்சேனை கிளையின் ஏற்பாட்டில் இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான 'விசேட தர்பிய்யா செயலமர்வு2023' நாளை 18 ஞாயிற்றுக்கிழமை மு.ப 08.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை அட்டாளைச்சேனை பெரியபள்ளிவாயலில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வை அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமா சபை மற்றும் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் செயலமர்வில் கலந்து கொண்டு நன்மையடையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## வாகரையில் நடமாடும் சேவை

மட்டக்களப்பு குறூப் நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கிணங்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சுகாதார சமூக சேவைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் பொதுமக்களுக்கான சேவையினை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளும் நடமாடும் சேவை மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஜி. அருணனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் அம்மந்தனாவெளி கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 220 நபர்களுக்கான காணி அனுமதிப்பத்திரம், போஷாக்கு அடைவு மட்டத்தில்



குறைந்தவர்களுக்கான உலர் உணவுப்பொதிகள், விசேட தேவையுடையவர்களுக்கான உபகரணம் மற்றும் முதியோர் அமைப்புக்களுக்கான கதிரைகள் போன்றன அதிகாரிகளினால் கையளிக்கப்பட்டன.

வாகரைப் பிரதேசத்தில் 1000 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு சேவையினைப் பெற்றுக் கொடுத்த இந் நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் காணிப் பிணக்குகள் என்பவற்றிற்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

## சம்மாந்துறை சபூர் வித்தியாலயத்தின் சிறுவர் சந்தை



சவளக்கடை குறூப் நிருபர்

சம்மாந்துறை சபூர் வித்தியாலயத்தில் உலக சுற்றாடல் தின நிகழ்வும் சிறுவர் சந்தையும் பாடசாலையின் அதிபர் எம்.வீ.எம்.சபீர் தலைமையில் (15) வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆசாத் எம்.ஹனிபா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

பிளாஸ்றிக் பொருட்களால் ஏற்படும் மாசுபாட்டைத் தவிர்போம் எனும் தொனிப்பொருளில் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டது.

இதன்போது சிறுவர் சந்தையில் சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பொருட்களை நுகர்வதற்காக விசேட பைகளையும் விநியோகித்தனர்.

## வடக்கின் உதயம்

### வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல்



(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்திலுள்ள மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு சில கிராம அலுவலர் பிரிவுகளை பிரிப்பதற்கும், சில பிரிவுகளை இணைப்பதற்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்டத்திலுள்ள மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், கூமாங்குளம், உக்குளாங்குளம், மகாறம்பைக்குளம் என்பனவும் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் மெனிக்பாம், ஆண்டியாபுளியங்குளம் என்பனவும் தனி கிராம அலுவலகப் பிரிவுகளாக பிரிப்பதற்கும், கலாபோகஸ்வேவ உள்ளிட்ட 4 சிங்கள குடியேற்ற கிராமங்களின் நிர்வாக நடவடிக்கையை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### யாழ். வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய

# பூர்வீக பாடசாலை வளாகத்தை விடுவிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாண குறூப் நிருபர்)





யாழ். சைக்கிள் பார்க் கொட்டகையில் இயங்கும் யாழ்.வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இப்பாடசாலை கல்லடி வேலுப்பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் இப்பாடசாலையின் பூர்வீக வளாகம் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது.

போர்க்காலத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறிய இப்பாடசாலை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கி வந்தது. தற்போது யாழ் வசாவிளான் மத்திய கல்லூரியின் மைதானத்திலுள்ள கொட்டகையில் இப்பாடசாலை இயங்கிவருகின்றது. இப்பாடசாலைக்கு சொந்தமான நிலம் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இதுதொடர்பில் அரசியல் தலைவர்கள், அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென குற்றம்சாட்டப்படுகின்றது.

அதுமட்டுமின்றி இப்பாடசாலைக்கு நிரந்தரமான அதிபர்களை நியமிப்பதில் பாரிய பின்னடைவை சந்தித்து வருவதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

சுமார் 239 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர். தரம் 1 முதல் 5 ஆம் ஆண்டு வரை மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையில் அதிகளவான பௌதீகவள குறைபாடு காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையில் வகுப்பறைகள் இன்மை பெரும் குறைப்பாடாகவுள்ளது.

1 முதல் தரம் 3 வரையான மாணவர்களை ஒருவகுப்பாகவும் தரம் 4 மற்றும் 5 மாணவர்களை இரண்டு வகுப்புக்களாகவும் இணைத்து கற்றல் செயற்பாடுகள் முன்னெடுப்பதாக அதிபர் தெரிவித்தார்.

அதிபர் உட்பட 8 ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களை உருவாக்கிவருகின்ற இப்பாடசாலையில் மாணவர்களுக்கான பௌதீகவளங்கள் பற்றாக்குறையாக உள்ளமை பெரும் பிரச்சினையாகவுள்ளது. வயாவிளான் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்விகற்கின்றனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா

யாழ். விசேட நிருபர்




கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா (1923 - 2023) நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு நூற்றாண்டு விழாவை பிரகடனப்படுத்தி வைத்தார். நூற்றாண்டு நினைவு சின்னமும் அவரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், இனிய விருந்தினராக கலாசாலை முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை வீ. கருணலிங்கம் மற்றும் யாழ்ப்பாண வலய கல்வி பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

1923 ஆம் ஆண்டு சேர் பொன் இராமநாதன் வழங்கிய ஐந்து ஏக்கர் நிலத்தில் இந்த கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் கல்வி வரலாற்றில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இக்கலாசாலையின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலையில் மோதல் சம்பவம்; 28 மாணவர்களின் தடை நீக்கம்

### 3 பேருக்கு எதிராக நடவடிக்கை

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வகுப்புத் தடை நீக்கப்பட்டுள்ளது.

மாணவர் குழு மோதல் சம்பவத்தின் அடிப்படையில் உள் நுழைவுத் தடை விதிக்கப்பட்டிருந்த மாணவர்களில் 28 பேர் மீதான தடை பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் நீக்கப்பட்டுள்ளதுடன், அடையாளப் படுத்தப்பட்ட மூன்று மாணவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் “மாகோஸ்” வார நிகழ்வுகள் கடந்த மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி மோதலில் முடிந்தது.

இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக் கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் கடந்த வாரம் இடம்பெற்றன. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட, இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் 03 பேரைத் தவிர ஏனைய 28 பேர் மீது விதிக்கப்பட்டிருந்த உள்நுழைவுத் தடை நீக்கப்பட்டுள்ளதாக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

பூர்வாங்க விசாரணைகளின் போது அடையாளப்படுத்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைவாகப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று சபையினால் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், பூர்வாங்க விசாரணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் பேரவைத் தீர்மானத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# பொகவான தோட்டத்தில் டெங்கு நுளம்பு பரவும் அபாயம்

(ஹற்றன் விசேட நிருபர்)



பொகவந்தலாவ பொகவான தோட்டத்தில் தொழிலாளர் தொடர் குடியிருப்பு பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படுவதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர். நாட்டில் தற்போது மழையுடனான காலநிலை ஏற்படுவதை தொடர்ந்து பல்வேறு பிரதேசங்களிலும் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் காரணமாக பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பொகவந்தலாவ பொகவான தொழிலாளர் குடியிருப்பில் கழிவுநீர் வழிந்தோடுவதற்கு அமைக்கப்பட்டுள்ள கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாமை காரணமாக பல இடங்களில் நீர் தேங்கியுள்ளன.

இதனால் நுளம்பு குடம்பிகள் அதிகரித்து இரவு வேளையில் தொல்லை தருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

டெங்கு காய்ச்சல் பரவினால் இப்பகுதியில் வாழும் சுமார் பலநூறு குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள், பெரியவர்கள் உட்பட பலர் பாதிக்கப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மலைச்சாரல்

# தியத்தலாவை பஸ் விபத்தில் ஐந்து மாணவர்கள் காயம்

(ஊவா சுழற்சி, பதுளை தினகரன் விசேட நிருபர்கள்)



தியத்தலாவை பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் ஐந்து பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரிலிருந்து தியத்தலாவை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும், பொரளந்தையிலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி பண்டாரவளை சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் தியத்தலாவை கஹகல்ல பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது. இதனால் சிறு காயங்களுக்குள்ளான 5 பாடசாலை மாணவர்களும், பாடசாலை பஸ் சாரதியுமாக ஆறு பேர் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் எவரும் ஆபத்தான நிலையில் இல்லையென தியத்தலாவை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்கான காரணத்தை கண்டறியும் முகமாக விசாரணைகளை தியத்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மாணவியை அச்சுறுத்திய இராணுவ சிப்பாய் கைது

கட்டுகஸ்தோட்ட பகுதியில் 17 வயது பாடசாலை மாணவியின் நிர்வாண புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுவதாக அச்சுறுத்திய 23 வயதுடைய இராணுவ சிப்பாய் ஒருவர் கட்டுகஸ்தோட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அநுராதபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், மின்னேரியா இராணுவ முகாமில் பொருளியல் பிரிவில் கடமையாற்றியவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இரண்டு துப்பாக்கிகளுடன் விசேட அதிரடிப் படையினரால் இருவர் கைது

பசறை ஆக்கரத்தனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மடுல்சீமை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ரபர்வத்தை மடுகஸ்தலாவ பகுதியில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய சந்தேகத்திற்கு இடமான பகுதியை சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்ட விசேட அதிரடிப் படையினர் வெடி மருந்து நிரப்பி பயன்படுத்தக் கூடிய துப்பாக்கியொன்றை கைப்பற்றியதுடன் 29 வயதுடைய அதே பகுதியைச் சேர்ந்த நபரொருவரையும் கைது செய்துள்ளனர். சந்தேகநபரையும் துப்பாக்கியையும் மடுல்சீமை பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொளும்புவத்தை இரண்டாம் கட்டை கமேவெல பகுதியிலும் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கியை தன்கைவசம் வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் தொளும்புவத்தை இரண்டாம் கட்டை கமேவெல பகுதியைச் சேர்ந்த நபரொருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரையும் துப்பாக்கியையும் பசறை பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடி படையினர் ஒப்படைத்தனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

## விவேகானந்த த. ம.வித்தியாலயம் கல்லூரியாக தரமுயர்வு

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

கண்டி நகரில் அமைந்துள்ள விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம் எதிர்வரும் 22/6/23 ஆம் திகதியுடன் விவேகானந்தக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஆர்.கலையரசி தெரிவித்தார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே புதிய விளம்பர பலகையை திரை நீக்கம் செய்யவுள்ளார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட அரசாங்க அதிபர், மத்திய மாகாண பிரதம செயலாளர், கல்வி செயலாளர், கல்விப்பணிப்பாளர்கள்,கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

# புத்தாக்கமான ஏற்றுமதி உத்திகளுடன் உலகளாவிய இருப்பை உறுதி செய்யும் Alumex

உயர்தர அலுமினியத்தின் முன்னணி உற்பத்தியாளரும், Hayleys குழுமத்தின் துணை நிறுவனமான Alumex PLC, அதன் மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகளை விரிவுபடுத்துவதற்கும், தொழில்துறையில் முன்னணி ஏற்றுமதியாளராக தனது நிலையை உறுதிப்படுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், Alumex PLC உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தையை தொடர்ச்சியான புத்தாக்கங்களுடன் தனதாக்கிக் கொள்ளும்.

உற்பத்தியாளர் இப்போது உள்ளூர் சந்தைக்கு புத்தாக்கமான புதிய DIY (Do it yourself) தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறார். புதிய வரம்பு, பரந்த அளவிலான தயாரிப்புகளை உள்ளடக்கியது, சந்தை தேவைகளை பூர்த்தி செய்யும் மற்றும் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு தனித்துவமான புத்தாக்கமான தீர்வுகளை வழங்கும்.

“கடந்த இரண்டு வருடங்கள் நம் அனைவருக்கும் சவாலானவை. எவ்வாறாயினும், சவால்களை சமாளிக்கக் கூடிய திறன் எங்களின் ஏற்றுமதியை விரிவுபடுத்தவும், அதிக ஏற்றுமதி வருவாயை உருவாக்கவும் மற்றும் எங்கள் தொழில் பங்குதாரர்களைக் கவனித்துக்கொள்ளவும் உதவுகிறது, இது எங்களது முக்கிய தூரநோக்கு பார்வையாகும்.” என Alumex முகாமைத்துவ பணிப்பாளர் பிரமுக் தெதிவெல தெரிவித்தார்.

Alumex இலங்கையில் ஏற்றுமதி விருதுகள் உட்பட பல்வேறு மதிப்புமிக்க தளங்கள் மற்றும் வணிகங்களில் இருந்து பல விருதுகளை வென்றுள்ளது. அவற்றில், 2022 NCE விருது வழங்கும் நிகழ்வில், ஏற்றுமதி அலுமினியம் உருக்கு முறைகளை அறிமுகப்படுத்தியதற்காக, இயந்திரங்கள் மற்றும் பொறியியல் உற்பத்தித் துறைக்கான தங்க விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், Alumex CNCI Achiever Award 2022 விருது வழங்கும் நிகழ்வில் முதல் 10 வெற்றியாளர்கள் மற்றும் தேசிய வணிக சிறப்பு விருதுகளில் உற்பத்தித் துறையில் முன்னணியில் இருப்பதன் மூலம் தொழில் துறையில் அதன் நற்பெயரை மேலும் வலுப்படுத்தியுள்ளது.






# துறைமுக நகரம் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தவுள்ளது



கொழும்பு துறைமுக நகரம், பிராந்தியத்தின் முதல் பல்வகை நாணய, சேவை ஏற்றுமதி விசேட பொருளாதார வலயமாக அதன் உயர் மட்ட செயல்பாட்டு நடவடிக்கையை எட்டவுள்ளது. 5 வருட வெளியீட்டுத் திட்டமானது 5.6 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையை வெளிநாட்டு நேரடி முதலீடாக எதிர்பார்க்கிறது. இது இலங்கையின் பொருளாதார மீட்சியை விரைவுபடுத்தும் என்பதுடன், துறைமுக நகரம் மற்றும் இலங்கை ஆகிய இரண்டையும் சேவை ஏற்றுமதித் துறையில் முன்னணி செயல்பாட்டாளராக நிலைநிறுத்தவுள்ளது.

“கொழும்பு துறைமுக நகரம் இலங்கையின் புதிய கட்ட வளர்ச்சிக்கு உதவும் என்பதுடன், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிஇறக்குமதி சமநிலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக இருக்கும். இப்பிராந்தியத்தினுள் நாட்டின் போட்டித்தன்மையை வலுப்படுத்தும் அதே வேளையில் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் செயல்பட ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மூலமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் எதிர்கால பொருளாதாரத்தை முன்னெடுப்பதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்,” என்று CHEC Port City இன் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரான துல்சி அலுவிஹார கூறினார்.

மகாவலி அபிவிருத்திக்குப் பின்னர் இலங்கையின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமாகத் திகழும் துறைமுக நகரம், 140,000 க்கும் மேற்பட்ட நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்கி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருடாந்தம் 13.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

269 ஹெக்டேயர் கடலிலிருந்து மீளப்பெறப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள கொழும்பு துறைமுக நகரம் என்பது சேவைகளின் ஏற்றுமதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது விசேட பொருளாதார வலயமாகும்.

திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் தொகை பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. இது 12,000 நேரடி வேலை வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளதுடன், 20 க்கும் மேற்பட்ட இலங்கை துணை ஒப்பந்ததாரர்கள் மூலமாக 4,000 இலங்கை தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

கடலிலிருந்து நிலத்தை மீட்கும் நடவடிக்கையில் மட்டும் இலங்கை நிறுவனங்கள் 5 மில்லியன் தொன் கல், 12 மில்லியன் லீட்டர் எரிபொருள், 80,000 தொன் சீமெந்து மற்றும் 1,200 தொன் உருக்கு இரும்பு ஆகியவற்றை வழங்கியுள்ளன.



இலங்கையின் தங்க நகை உலகின் முடிசூடா மன்னனாக திகழும் ராஜா ஜுவலர்ஸ், சர்வதேச சமுத்திர தினத்தையிட்டு மேற்கொள்ளப்பட்ட, கடற்கரை தூய்மைப்படுத்தும் திட்டத்தின் மூலம் சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறானதன்மைக்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. வாதுவை கடற்கரையில், ஞாயிறு தினத்தில், சூழல் பாதுகாப்பிற்கு ஆதரவளிக்கும் முயற்சியாக நடைபெற்ற இந்நிகழ்வில், ராஜா ஜுவலர்ஸ் ஊழியர்கள் மும்முரமாக பங்கேற்றதோடு, ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பாவனையைக் குறைப்பது குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

# செலிங்கோ லை:ஃபின் பிரதம செயற்பாட்டு அதிகாரி, பிரதி பிரதம செயற்பாட்டு அதிகாரி நியமனம்



செலிங்கோ லைஃப் அதன் பிரதம செயற்பாட்டு அதிகாரியாக ரங்க அபேநாயக்க மற்றும் பிரதி பிரதம செயற்பாட்டு அதிகாரியாக சமிதா ஹேமச்சந்திர ஆகியோரை நியமனம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. அடுத்த தசாப்தம் மற்றும் அதற்கு அப்பாலும் கம்பனியின் தலைமைத்துவ வரிசையை உறுதி செய்யும் வகையில் இவ்விரண்டு பதவிகளும் உருவாக்கப்பட்டு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ரங்க அபேநாயக்க செலிங்கோ லைஃப்பில் கடந்த 25 வருடங்களாகப் பணியாற்றுகின்றார். அவர் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கம்பனியின் பிரதி பிரதம நிதி அதிகாரியாகவும் உள்ளார். சமிதா ஹேமச்சந்திர கம்பனியில் 23 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றார். அவர் சந்தைப்படுத்தல் பிரிவு பொது முகாமையாளராக உள்ளார்.

“இந்த நியமனங்கள் தலைமைத்துவ கட்டமைப்புக்கு மேலும் ஆழத்தையும் வலுவையும் வழங்குகின்றன. அடுத்த 10 முதல் 15 ஆண்டுகளுக்கான எமது தலைமைத்துவ தேவையை கவனித்துக் கொள்ளும் வகையிலும் இவை அமைந்துள்ளன” என்று கூறினார் செலிங்கோ லைஃப்பின் தலைவர் ஆர். ரெங்கநாதன். “வெளிப்படைத்தன்மை மற்றும் நீண்டகாலத்துக்கு அடுத்தடுத்து வரும் தலைமைத்துவத்தை திட்டமிடல் என்பன நிதிச் சேவைப் பிரிவில் மிகவும் முக்கியமானவை. இது சகல தரப்பினருக்கும் முடிவற்ற சுமுகமான தொடர்ச்சியை உறுதி செய்கின்றது” என்று அவர் மேலும் கூறினார்.

# Amana Takaful Insurance சிறந்த ஊழியர்களுக்கு கௌரவிப்பு



இலங்கையின் முதன்மையான காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான Amana Takaful Insurance, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள Monarch Imperial இல் தனது வருடாந்த விருது வழங்கும் விழாவை மிகவும் கோலாகலமாக நடத்தியது. "சவால்களை வென்று எழுதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இந்நிகழ்வானது, தடைகளை தாண்டி வெற்றியை அடைவதில் இந்த நிறுவனம் காட்டிய திடமான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. நாட்டில் நிலவிய சவாலான பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில், Amana Takaful Insurance நிறுவனத்தின் தொடர் வலுவான நிதிச் செயல்பாட்டின் பின்னணியில், இந்நிகழ்வு காலத்துக்கேற்ற, முக்கியமான நிகழ்வாக அமைந்தது.

"Champions of Champions" விருது M.M.K முனீஃப் அவர்களுக்கு வழங்கப்பட்டமை சிறப்பம்சம் ஆகும். அவரது சிறப்பான செயல்திறன் மற்றும் வணிகத்திற்காக அவர் வழங்கிய விலைமதிப்பற்ற பங்களிப்புகளை அங்கீகரிக்கும் முகமாக இந்த பாராட்டு அவருக்கு வழங்கப்பட்டது. இவ்வங்கீகாரத்துடன், முனீஃப் ரொக்கப் பரிசையும் வெளிநாட்டு சுற்றுப்பயணத்துக்கான வாய்ப்பையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் சார்பாக, 'Champions of Champions' விருதினை தனது சாதனைகளுக்காக A.H.A இஃப்ஹாம் வென்றார். இஃப்ஹாமின் சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் அவர் அடைந்த சாதனைகள் காரணமாக அவர் First Court of the Table (COT) விருதையும் பெற்று ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டினார். Amana Takaful Ife Insurance நிறுவனத்தின் வரலாற்றில் ஒரு ஆலோசகர் இந்த நன்மதிப்பிற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றமை இதுவே முதன்முறையாகும். அவரது சிறப்புமிக்க சாதனையை கௌரவிக்கும் வகையில், இஃப்ஹாமுக்கு 1 மில்லியன் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. ஆயுள் காப்பீட்டு ஆலோசகர் வெல்லக்கூடிய இரண்டாவது மிக உயரிய பிரிவான Court of the Table ஆனது, ஒரு விற்பனை ஆலோசகர் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விட மூன்று மடங்கு அதிகமாக அடையும் போது பெறப்படும்.



# பிளாஸ்டிக் மாசுபாட்டை கட்டுப்படுத்த 'Eko Wave' வசதி அறிமுகம்

2023ஆம் ஆண்டின், உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, CocaCola அறக்கட்டளை, EcoSpindles மற்றும் Janathakshan (GTE) ஆகியன இணைந்து, கொழும்பில் மேம்பட்ட கழிவுகளை முன் பதப்படுத்தும் மையங்களை (MRF) 'Eko Wave' திறந்து வைத்தது. இந்நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் பத்திரகே கலந்துகொண்டார்.

'பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கான தீர்வுகள்' (Solutions to Plastic Pollution) என்ற உலக சுற்றுச்சூழல் தினத்திற்கான ஐக்கிய நாடுகளின் தொனிப்பொருளுக்கு ஏற்ப தீர்க்கமான நடவடிக்கையை எடுத்து, கொழும்பில் உள்ள Eko Wave MRF சுற்றுச்சூழல் பேண்தகைமையான உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது மற்றும் உள்ளூர் பிளாஸ்டிக் கழிவு பிரச்சினைகளுக்கு வலுவான தீர்வை வழங்குகிறது. பிராந்தியத்தில் நிலவும் பிளாஸ்டிக்கழிவு நிர்வகிப்பு சவால்களுக்கு ஒரு விரிவான தீர்வாக, MRF திறமையான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கமான கழிவு செயலாக்க செயல்முறைகளைப் பயன்படுத்துகிறது, பொறுப்பான உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு ஒரு பாராட்டத்தக்க முன்மாதிரியாக இது அமைகிறது.

MRF ஆனது CocaCola இன் உதவி அளிக்கும் பிரிவான The CocaCola Foundation (TCCF) மற்றும் இலங்கையில் உள்ள பிரபல பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிறுவனமான Eco Spindles ஆகியவற்றின் நிதி மற்றும் ஆதரவுடன் நிறுவப்பட்டது. ஜனதாக்ஷன் (ஜிடிஇ) லிமிடெட், ஒரு மரியாதைக்குரிய இலாப நோக்கற்ற அமைப்பால் செயல்படுத்தப்பட்டது, இது சுற்று பொருளாதார நடைமுறைகளை மேம்படுத்துவதிலும், நாட்டில் குறைந்த கார்பன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னேற்றுவதிலும் நிபுணத்துவம் பெற்றதற்காக அங்கீகரிக்கப்பட்டது. Eko Wave கொழும்பில் உள்ள பிளாஸ்டிக் கழிவு நிர்வகிப்பு சவால்களை நிவர்த்தி செய்கிறது மற்றும் ஒவ்வொரு மாதமும் 20,000 கிலோகிராம் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து செயலாக்கும் திறனைக் கொண்டுள்ளது.

கொழும்பு, இலங்கையின் பிரதான வர்த்தக மையமாக இருப்பதால், கணிசமான கழிவு அகற்றல் பிரச்சினையை எதிர்கொள்கிறது, நாளொன்றுக்கு சுமார் 1057.5 மெட்ரிக் தொன் கழிவுகள், முதன்மையாக வீடுகளில் இருந்து வெளியேற்றப்படுகின்றது.

# இலங்கை சுற்றுலாத்துறைக்கு ஊக்கமளிக்கும் சமையல் கலை நிபுணர்கள் நிகழ்வு



பல்வேறு வகையான பால் பொருட்களை உற்பத்தி செய்து, பெறுமதியான அந்நியச் செலாவணியை நாட்டுக்காக சேமிக்கும் இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமமான பெல்வத்தை டெய்ரி (Pelwatte Dairy), இலங்கையின் சமையல் மற்றும் விருந்தோம்பல் துறைகளில் ஒரு மூலக்கல்லாக விளங்கும் இலங்கையின் சமையல் கலை நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக அண்மையில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

நீர்கொழும்பு Amagi Aria ஹோட்டலில் நடைபெற்ற (Chef Event) சமையல் கலை நிகழ்வானது, Chef's Guild of Lanka உடன் இணைந்து பெல்வத்தை டெய்ரி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சமையல் கலை வல்லுநர்கள் தங்களுக்குள் வலையமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான ஒரு தளமாக மாறிய அதே நேரத்தில், அவர்களின் தொழில்முறை மற்றும் திறன் மேம்பாட்டிற்கு குறிப்பிடும்படியான ஊக்கத்தையும் அளித்தது. இந்நிகழ்வின் மற்றுமொரு பங்குதாரராக Amagi Aria ஹோட்டல் விளங்கியது.

Pelwatte Dairy, நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் சுசந்த இது தொடர்பில் தெரிவிக்கையில், "பெல்வத்தை நிறுவனம் நீர்கொழும்பில் நடத்திய இந்த Chef Event ஆனது, 100 சமையல் கலை வல்லுனர்களுக்கான வலையமைப்புத் தளமாக அமைந்ததோடு, அவர்களின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட திறன்களையும் மேம்படுத்தியது. இங்கு தமது பால் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வையும் பெல்வத்தை வழங்கியிருந்தது. இந்நிகழ்வை இலங்கையின் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வாக பெல்வதை அமைத்திருந்ததோடு, சுற்றுலாவிலிருந்து பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தை பெறுவதற்கு உதவும் வழிகாட்டல் நிகழ்வாகவும் இது காணப்பட்டது. தற்போதைய தேசிய நெருக்கடியை சமாளிப்பதில் உள்ளூர் பால் தொழில்துறையின் பங்கு குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது." என்றார்.

## சமூகங்களை வலுவூட்டுதன் மூலம்

# குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டிய ஜோன் கீல்ஸ் குழுமம்



2022 இன் முற்பகுதியில் இலங்கையின் எதிர்பார்திராத சமூகபொருளாதார நெருக்கடியை அடுத்து, ஜோன் கீல்ஸ் குழுமம் அதன் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு (CSR) நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஃபவுண்டேஷன் மூலம் பல்முனை கொண்ட நெருக்கடி நிலைக்கான பதில் நடவடிக்கையை ஆரம்பித்தது. தீவு முழுவதிலும் உள்ள குழுமத்தின் வணிகங்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்ட இந்த முயற்சியானது, "நாளைக்கான தேசத்தை மேம்படுத்துதல்" என்ற குழுவின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு பார்வைக்கு இணங்க, சமூகங்களை ஆதரிப்பதிலும், வலுவூட்டுதன் மூலமும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளது.

வீட்டுத்தோட்ட திட்டம் முன்முயற்சியின் கீழ் தொடங்கப்பட்ட முதல் திட்டங்களில் ஒன்றாகும் குழுமத்தின் வணிகங்களைச் சுற்றியுள்ள இடங்களில் அமைந்துள்ள 1,284 குடும்பங்களுக்கு, வீட்டுத் தோட்டத்தை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் உள்ளீடுகள் மற்றும் அதைப் பற்றிய நடைமுறை புரிதல் வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு முக்கியமான முன்முயற்சியானது நிலையான விவசாயத் திட்டமாகும், இது சினமன் ரிசார்ட்டைச்; சுற்றியுள்ள மொத்தம் 19 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட 28 விளைநிலங்களை ஆதரிப்பதில் ஒரு முக்கிய பங்கை வகித்தது. இந்த முயற்சி உள்ளூர் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தியது மட்டுமல்லாமல், இந்தப் பகுதிகளில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பையும் மேம்படுத்தியது

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் துணை முயற்சியாக, சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சியால் ரணாலயிலும் கீல்ஸ் ஃபுட் புராடக்ட்ஸால் பன்னலையிலும் மாதிரி பண்ணைகள் அமைக்கப்பட்டன. அதே நேரத்தில் சினமன் பெந்தோட்ட பீச் மற்றும் சினமன் லொட்ஜ் ஹபரன ஆகிய இடங்களில் பச்சை வீடு நிறுவப்பட்டன. இந்த முன்முயற்சிகள் ஊழியர்கள் மற்றும் சமூகங்களிடையே தன்னம்பிக்கையை வளர்ப்பது மட்டுமில்லாமல், ஊழியர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் சிறந்த விவசாய நடைமுறைகள் பற்றிய அறிவைப் பரிமாறிக்கொள்ள விலைமதிப்பற்ற கற்றலுக்கான வசதியையும் வழங்கியுள்ளது.

# பயிற்சி போட்டியில் அமெரிக்காவை துவம்சம் செய்தது இலங்கை அணி



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் அமெரிக்காவை துவம்சம் செய்த இலங்கை அணி 198 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

புலவாயோவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக பத்தும் நிசங்க 25 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தபோதும் இரண்டாவது விக்கெட்டுக்கு இணைந்த திமுத் கருணாரத்ன மற்றும் குசல் மெண்டிஸ் 191 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இதன்போது சிறப்பாக ஆடிய கருணாரத்ன 100 பந்துகளில் 15 பௌண்டரிகளுடன் 111 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஓய்வு எடுத்துக் கொண்டார். மறுமுனையில் குசல் மெண்டிஸ் 91 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் 105 ஓட்டங்களை பெற்றார்.

தொடர்ந்து வந்த சதீர சமரவிக்ரமவினால் 9 ஓட்டங்களையே பெற முடிந்தபோதும் அதிரடியாக ஆடிய சரித் அசலங்க 37 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களை விளாசினார்.

அதேபோன்று தசுன் ஷானக்கவும் 30 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை அணி 50 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 392 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த அமெரிக்க அணிக்கு இளம் வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பதிரண நெருக்கடி கொடுத்தார். அமெரிக்க அணியின் முதல் இரு விக்கெட்டுகளும் 10 ஓட்டங்களுக்கு பறிபோன நிலையில் பதிரண மத்திய வரிசை விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இதனால் அமெரிக்க அணி 33.2 ஓவர்களில் 194 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. அணித் தலைவர் மொனான்க் படேல் மற்றும் ஷயான் ஜஹன்கிர் முறையே 68 மற்றும் 63 ஓட்டங்களை பெற்றனர்.

அபாரமாக பந்துவீசிய மதீஷ பதிரண 6 ஓவர்களில் 23 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். கசுன் ராஜித்த மற்றும் வனிந்து ஹசரங்க தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி நாளை (18) ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் திங்கட்கிழமை (19) ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொள்ளவுள்ளது.

# அக்கரைப்பற்று மேற்கு வலய அணிக்கு வெற்றி

திராய்க்கேணி தினகரன் நிருபர்



சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று மேற்கு வலய அணி வெற்றிபெற்று மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

'இளைஞர்களுக்கான ஓர் இனிய அழைப்பு என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் அக்கரைப்பற்று அதாஉல்லா விளையாட்டு அரங்கில் கடந்த புதன்கிழமை (14) நடைபெற்றது. அக்கரைப்பற்று கிழக்கு மற்றும் மேற்கு சமுர்த்தி வலயங்களுக்கு இடையிலேயே இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எஹியா றாஸித் கலந்துகொண்டார்.

# உலகக் கிண்ண தகுதிகாண்: சிரசவுக்கு ஒளிபரப்பு உரிமை




சிம்பாப்வேயில் நாளை (18) ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கான ஒளிபரப்பு உரிமையை தனியார் ஊடக நிறுவனமான எம்.டி.வி சேனல் (பிறைவெட்) லிமிடெட் பெற்றுள்ளது.

இது தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த வியாழக்கிழமை (15) நடைபெற்றது.

இதில் வரையறுக்கப்பட்ட கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் உயர் மட்ட நிர்வாக அதிகாரிகள், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகள், தேசிய விளையாட்டு சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

நாளை ஆரம்பமாகும் 12ஆவது உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள் எதிர்வரும் ஜுலை 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த போட்டிகள் அனைத்தும் எம்.டி.வி நிறுவனத்தின் சிரச டிவி மற்றும் டிவி1 தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவுள்ளன.

இந்த தகுதிகாண் போட்டியில் பங்கேற்கும் இலங்கை அணி ஆரம்ப சுற்றில் பி குழுவில் இடம்பெற்றுள்ளது. இலங்கை அணி தனது முதல் போட்டியில் வரும் திங்கட்கிழமை (19) ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொள்ளவுள்ளது.

# ஆசிய கிண்ண ஏற்பாடுகள் பற்றி பாகிஸ்தான் மகிழ்ச்சி



எதிர்வரும் ஆசிய கிண்ணத் தொடரின் ஒரு பகுதியையேனும் பாகிஸ்தானில் நடத்த வாய்ப்புக் கிடைத்ததற்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் செதி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

2023 ஆசிய கிண்ணத் தொடரை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றிருந்தபோதும், பாகிஸ்தான் வர இந்தியா மறுத்த நிலையில் போட்டியை இரு நாடுகளில் நடத்தும் வகையில் கலப்பு முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 17 ஆம் திகதி வரை ஒருநாள் வடிவில் நடைபெறும் ஆசிய கிண்ணத் தொடரில் நான்கு போட்டிகளை பாகிஸ்தானிலும் எஞ்சிய ஒன்பது போட்டிகளை இலங்கையிலும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இது பற்றிய அறிவிப்பை ஆசிய கிரிக்கெட் கௌன்சில் கடந்த வியாழனன்று (15) வெளியிட்டது.

“2023 ஆசிய கிண்ண தொடருக்கான எமது கலப்பு முறையை ஏற்றது தொடர்பில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதாவது பாகிஸ்தான் தான் போட்டியை நடத்தும் நாடாக இருக்கும், இந்தியாவுக்கு பாகிஸ்தான் வர முடியாததால் இலங்கையில் பொதுவான நாடு ஒன்றாக போட்டிகள் நடைபெறும்.

15 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையான இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் பார்க்கக் கிடைத்திருந்தால் கிரிக்கெட் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். ஆனால் எமக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் நிலைப்பாட்டை புரிந்து கொள்ள முடியும்” என்று நஜாம் செதி தெரிவித்துள்ளார்.

# கால்பந்து வாழ்வில் அதிவேக கோலை புகுத்தினார் மெஸ்ஸி



சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நட்புறவு கால்பந்து போட்டியில் ஆர்ஜன்டீன நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி தனது கால்பந்து வாழ்வில் அதிவேக கோலை பதிவு செய்தார்.


கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியின் 79 ஆவது வினாடியிலேயே இடது காலால் கோல் புகுத்திய மெஸ்ஸி ஆர்ஜன்டீன அணியை முன்னிலை பெறச் செய்தார். இதற்கு முன் கழகப் போட்டியில் 127 ஆவது வினாடியில் பந்தை வலைக்குள் அனுப்பியதே அவரது மின்னல்வேக கோலாக இருந்தது. மொத்தத்தில் மெஸ்ஸியின் 103 ஆவது சர்வதேச கோலாக இது பதிவானது.

மெஸ்ஸி தனது கால்பந்து வாழ்வில் முதல் 60 வினாடிகள் தவிர்த்து ஒவ்வொரு நிமிடத்திலும் கோல் பெற்றிருப்பதாக விளையாட்டு தொடர்பில் தரவு சேகரிக்கும் கிரேஸ்நோட் தெரிவத்துள்ளது. அவரது பெரும்பாலான கோல்கள் 87 ஆவது நிமிடத்திலேயே புகுத்தப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் உலக சம்பியனான ஆர்ஜன்டீன அணி 2–0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. இதில் ஜெர்மன் பெசெல்லா 68 ஆவது நிமிடத்தில் ஆர்ஜன்டீன அணிக்காக இரண்டாவது கோலை பெற்றார். முன்னதாக நூற்றுக்கணக்கான சீன ரசிகர்கள் அர்ஜென்டீன கொடிகளை அசைத்து, மெஸ்ஸி ஜெர்சி அணிந்து அணியினர் தங்கியிருந்த சொகுசு ஹோட்டலுக்கு வெளியே உற்சாக வரவேற்பு கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# 'முரளி 800' திரைப்படத்தில் சர்ச்சைக்குரிய இரு ஆஸி. நடுவர்களாக பிரிட்டன் நடிகர்கள்






## திரைப்படத்தின் படப்பிடிப்புகள் நிறைவு

இலங்கை முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட 800 திரைப்படத்தில் டெரல் ஹெயார் மற்றும் ரொஸ் எமர்சன் ஆகிய இரு அவுஸ்திரேலிய நடுவர்களின் கதாபாத்திரத்தில் இரு பிரிட்டன் நடிகர்கள் இடம்பெற்றிருப்பதாக அந்தத் திரைப்படத்தை எழுதி, இயக்கும் எம்.எஸ் ஸ்ரீபதி தெரிவித்துள்ளார்.

சட்டப் பிரச்சினைகளை தவிர்த்தப்பதற்காக அந்த இரு ஆஸி. நடுவர்களின் பெயர்களும் வெளியிடப்படவில்லை என்று இணையதளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் அதிகம் பிரபலம் இல்லாதபோதும் சில திரைப் படங்களில் நடித்திருக்கும் பில் ஹேஸ்ட் மற்றும் போல் கொஸ்டா ஆகிய நடிகர்களே இந்தத் திரைப்படத்தில் இடம்பெற்றுள்ளனர்.

“நட்சத்திர நடிகர்களுக்கான அனைத்து காட்சிகளின் படப்பிடிப்புகளும் பூர்த்தியாகிவிட்டன. இந்தத் திரைப்படம் தயாராவதற்காக இசை, சௌண்ட் அபெக்ட் மற்றும் விசுவல் அபெக்ட் பூர்த்தியாகும் வரை நாம் காத்திருக்கிறோம்.

எவ்வாறாயினும் இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் திரைப்படம் வெளியிடப்படும்.

திரைப்படத்தின் இறுதிக் காட்சி இந்தியாவில் படம்பிடிக்கப்பட்டது. ஏனென்றால் முரளியில் 800ஆவது விக்கெட் இந்தியாவுக்கு எதிராகவே வீழ்த்தப்பட்டது.

படப்பிடிப்புகள் இலங்கை, சென்னை, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் எடுக்கப்பட்டன” என்று ஸ்ரீபதி அந்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

முரளியின் திருமண தொடர்பான நிகழ்வுகள் சென்னையில் படம்பிடிக்கப்பட்டுள்ளது. முரளி 2005ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதி சென்னையைச் சேர்ந்த மதிமலர் ராமமூர்த்தியை திருமணம் செய்தார்.

“மதியின் கதாபாத்திரத்தில் இந்திய நடிகை மஹிமா நம்பியார் நடிப்பதோடு முரளியின் கதாபாத்திரத்தில் மதுர் மிட்டால் நடிக்கிறார்.

1996 உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணித் தலைவர் அர்ஜுன் ரணதுங்க, இந்தியா முன்னாள் வீரர் கபில் தேவ் மற்றும் பல முன்னணி கிரிக்கெட் வீரர்களின் கதாபாத்திரங்களில் ஆசிய நாடுகளைச் சோர்ந்த நடிகர்கள் நடித்துள்ளனர்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதில் 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொக்ஸின் தின டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவுஸ்திரேலிய நடுவர் டெரல் ஹெயார், முரளிதரனின் பந்துவீச்சு பணிக்கு நோ போல் பிடித்தார். அதே சுற்றுப்பயணத்தில் ஒருநாள் தொடரிலும் இது நிகழ்ந்தது. அப்போது நடுவர் ரோஸ் எமர்சன் முரளியின் பந்துக்கு நோபோல் பிடித்ததோடு முரளி லெக் பிரேக் பந்துவீசிய போதும் நோபோல் காட்டினார்.

# சென்னை அணியின் வீரர்கள் டெக்சாஸ் அணிக்கு அழைப்பு



அமெரிக்காவில் முதன்முறையாக நடைபெறவுள்ள மேஜர் லீக் கிரிக்கெட் டி20 தொடருக்கான டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மூன்று வீரர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.


நடப்பு இந்தியன் பிரீமியர் லீக் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகமானது, அமெரிக்காவில் நடைபெறவுள்ள எம்.எல்.சி தொடரின் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணியை வாங்கியுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் ஸ்டீபன் பிளமிங் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராகவும் செயற்படவுள்ள நிலையில், சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட டுவைன் பிராவோ டெக்சாஸ் அணியில் வீரராக அந்தத் தொடரில் விளையாடவுள்ளார்.

இந்த அறிவிப்புகள் ஏற்கனவே வெளியாகியிருந்த நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக செயற்பட்ட நியூசிலாந்தின் டெவோன் கொன்வே மற்றும் சகலதுறை வீரர் மிச்சல் சென்ட்னர் ஆகியோர் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் ஐ.பி.எல் தொடரிலிருந்து ஓய்வை அறிவித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அனுபவ வீரரான அம்பத்தி ராயுடு டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடவுள்ளார்.

# சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து இன்று ஆரம்பம்



கொழும்பு சிட்டி கால்பந்து லீக் ஏற்பாடு செய்துள்ள முன்னணி கழகங்கள் பங்கேற்கும் ஆறாவது சிட்டி லீக் தலைவர் கிண்ண தொடர் இன்று (17) ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை போட்டியில் நடப்புச் சம்பியன் சோண்டர்ஸ் விளையாட்டுக் கழகம், ஜாவா லேன் விளையாட்டுக் கழகம், கொழும்பு கால்பந்து கழகம், மொறகஸ்முல்ல விளையாட்டுக் கழகம் மற்றும் புதிய அணியாக மாளிகாவத்தை யூத் விளையாட்டுக் கழகம் போட்டியிடவுள்ளன. அனைத்து போட்டிகளும் சிட்டி லீக் மைதானத்தில் இடம்பெறும்.

தொடரின் ஆரம்பப் போட்டி இன்று (17) சோண்டர்ஸ் மற்றும் ஜாவா லேன் அணிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ளது. முதல் சுற்று லீக் முறையில் இடம்பெறவுள்ளதுடன், தொடரை ஜுலை மாத இறுதிக்குள் நிறைவு செய்ய போட்டி ஏற்பாட்டுக் குழு திட்டமிட்டுள்ளது.

சுற்றுத் தொடரில் சம்பியனாகத் தெரிவாகும் அணிக்கு 150,000 ரூபா பணப்பரிசும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 100,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளதுடன், அனைத்து போட்டிகளிலும் சிறந்த வீரராக தெரிவு செய்யப்படுபவருக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுன் மாதம் 17ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.